Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

THAMPI links with LIONAIR

50 நிமிடங்களில் கொழும்பு/யாழ்.!

Tickets Available For RS. 1999/-

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்....
01-343125, 021-2222040, 2222504, 2222823
Hotline - 0777-382343, 072-401423.
(சி-052)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 30 ஆம் நாள் (16.10.2002) புதன்கிழமை இதழ் : 16

# பிரபாகரனுடன் அடுத்தவார முற்பகுதியில் நோர்வே உயர்மட்டக் குழுவினர் பேச்சு !

## - பாலசிங்கமும் தமிழ்ச்செல்வனும் பங்கேற்பர் -

(கிளிநொச்சி நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் நோர்வே அரசின் உயர்மட்ட அரச தூதுக் குழுவுடன், அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி வன்னியில், அடுத்த வார முற்பகுதியில் பேசவுள்ளனர்.**

வன்னிக்கு வந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசி ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் அடுத்த வார முற்பகுதியில் நோர்வே அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவினருடன் முக்கிய பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், நோர்வே அரசின் விசேட தூதுவர் எரிக்

(10ஆம் பக்கம் பார்க்க)



வன்னி வந்த பாலசிங்கம் தம்பதியினரை வரவேற்று விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் உரையாடும் காட்சி

## பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு தமிழ்ச்செல்வனை சந்திப்பு

(கிளிநொச்சி நிருபர்)

வன்னிக்கான விஜயத்தை மேற்கொண்ட பிரித்தானிய, ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

பிரித்தானியத் தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஹரத் தோமஸ், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான றொபேட் ஈவன்சன் ஆகியோர் நேற்று மாலை 2 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள அரசி

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் வருகையையொட்டி கட்டுநாயக்காவில் கடும் பாதுகாப்பு

### புலிகளின் பிரமுகர்கள் வன்னியில் வரவேற்பு

(கிளிநொச்சி)

நேற்றுக்காலை கட்டுநாயக்கா வந்து சேர்ந்த விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டு செய்தியா ளர்கள் உட்பட எவரும் அவ்வரைச் சந்திக்க விமான நிலையத்தில் அனுமதி வழங்கப்படவில்லை.

கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் தனது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கத்துடன் ஹெலிகொப்ரர் மூலமாக பின்னர் புதுக்குடியிருப்பை வந்தடைந்த போது, அவரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,விடுதலைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபா - பாலா நேற்று வன்னியில் சந்திப்பு

### - தாய்லாந்துப் பேச்சுக்கள் குறித்து ஆராய்வு -

(கிளிநொச்சி நிருபர்)

வன்னிக்கு வந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் - தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நேற்றுமாலை சந்தித்துப்பேசினார்.

இச்சந்திப்பின்போது - அண்மையில் நடைபெற்ற தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கள் பற்றியும் ஏனைய பல விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலி, டெனிஷ் எம்.பிக்கள் வன்னிக்கு இன்று விஜயம்

(கொழும்பு நிருபர்)

இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர். கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் உணர்வை வாஜ்பாயிடம் கூறுவோம்

### இந்தியப் பேராசிரியர் தேவசகாயம்



வட பகுதியில் தமிழ்மக்கள் அமைதி மற்றும் சமாதானம் குறித்து மிகவும் ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் உள்ளனர். இவர்களது மன உணர்வுகளை இந்திய அரசிடம் நாம் நேரடியாக எடுத்துச் சொல்லவிருக்கின்றோம். இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கான இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இங்கு வந்து சேர்ந்த இந்திய மக்கள் உரிமைக் குழுவைச் சேர்ந்தவரும் பேராசிரியருமான ஐ.தேவசகாயம் எமது செய்தியாளருக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து பேசும் போது -

தமிழ் மக்கள் வட-கிழக்கு பகுதிகளில் சமாதான சூழல் தொடர்ந்து நிலவவேண்டும் என்பதிலும் அமைதியிலும் சமாதானத்திலும் அவர்கள் மிகவும் நம்பிக்கை வைத்து பெரும் எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதேவேளை - தமிழ்நாட்டு அரசிலும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிலும் இலங்கைத் தமிழர்கள் மிகவும் வெறுப்புணர்வுடனும் கோப

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சில்லறை வியாபாரத்திலை சில்லறையில்லையெண்டு சொல்லுறது ஒரு திறமான யுக்தி பாருங்கோ!

## சில்லறை நாணயங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சில்லறைக் காசுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அரச திணைக்களங்களின் காசாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஐம்பது சதத்திலிருந்து ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் வரை மிகுந்த தட்டுப்பாடு நிலவுகிறது. இருபத்தைந்து சத நாணயத்தை கண்களால் காணவும் முடிவதில்லை.

இந்நிலையில் ஊழியர்களின் மொத்தச்சம்பளம் சில்லறை நாணயங்களும் சேர்த்தே வழங்கவேண்டிய

(10ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு நிருபர்)

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

பெற்றோல் ஒரு லீற்றர் ஒரு ரூபா ஐம்பதுசதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. டீசல் ஒரு லீற்றர் ஒரு ரூபா 20 சதத்தினாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் இரண்டு ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஏனைய எரிபொருட்களின் விலைகளும் சிறியளவு உயர்த்தப்பட்டிருப்

(10ஆம் பக்கம் பார்க்க)

# துர்நாற்றம் வீசும் கோண்டாவில் மயான வீதி; தொற்று நோய்கள் பரவலாம் என அச்சம்!

(ஊரெழு)

கோண்டாவில் மயான வீதியில் துர்நாற்றம் வீசுவதால் இப்பாதையூடாகப் பயணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி மயானத்திற்கு அருகில் ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எலும்புகள், மண்டைஓடுகள் மற்றும் குப்பைகூழங்கள் வீதியின் இருமருங்கிலும் வாகனங்களில் கொண்டு வந்து போடப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

மழைகாலத்தில் மிகவும் மோசமான துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படலாம் எனவும் இப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (96)

## ஊர்காவற்றுறை மேலதிக நீதிவானாக சரோஜினி இளங்கோவன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

நீதிச்சேவை ஆணைக்குழு யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சரோஜினிதேவி இளங்கோவனை ஊர்காவற்றுறை மாவட்ட மேலதிக நீதிவானாக நேற்று நியமித்துள்ளது.

முன்னர் மல்லாகம் மேலதிக நீதிவான் பாலசுப்பிரமணியம் ஊர்காவற்றுறையில் மேலதிக நீதிவானாக கடமையாற்றினார். இவருக்குப் பதிலாகவே சரோஜினி தேவி இளங்கோவன் நியமிக்கப்பட்டதுடன் இவர் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதியாகவும் கடமையாற்றுவார்.

(லி)

## தீவக பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி

பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நவீன தகவல் தொழில் நுட்ப அறிவை வழங்கும் நோக்குடன் தமிழ் தகவல் தொழில் நுட்ப அமைப்பும் (T.I.T.A) தீவக வலயக்கல்வி அலுவலகமும் இணைந்து பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்துள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதில் தரம் 9 தொடக்கம் தரம் 13 வரை கற்கும் தீவகவலயப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிப் பயன் அடைவதுடன் அதிபர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (109)

## வடமராட்சியில் மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை

(கைதடி)

யாழ்.மாவட்ட மக்களை மிதிவெடி மற்றும் வெடிபொருட்களில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் யுனிசெவ் நிறுவனமும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து கடந்த ஜனவரி மாதம் முதல் ஆரம்பித்து செயற்படுத்தி வரும் விழிப்புணர்வுத் திட்ட ஆற்றுகை - வடமராட்சியில் இன்றிலிருந்து 18ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளது.

பளை மத்திய கல்லூரியில் இன்று காலை 10.30 மணிக்கும், தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கும், கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையில் 17ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கும், சென்.தோமஸ் றோ.க.பெண்கள் .பாடசாலையில் 17ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கும், ஹாட்லிக்கல்லூரியில் 18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கும், பிற்பகல் 1.30மணிக்கும் இவ்விழிப்புணர்வுச் செயற்திட்ட ஆற்றுகை மேடையேற்றப்படவுள்ளது.

விழிப்புணர்வுச் செயற்திட்ட ஆற்றுகை இதுவரை 115 பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (31)

## தென்மராட்சி பிரதேச செயலராக மீண்டும் சுந்தரம்பிள்ளை!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலாளராக மீண்டும் சுந்தரம்பிள்ளை நியமிக்கப்படவுள்ளார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமான பிரதேச செயலர் இல்லாமையால் ஏற்படும் அசௌகரியங்களை தடுக்கும் நோக்குடனும், மேற்படி பகுதிகளில் இனி வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் வசதியாகவே சுந்தரம்பிள்ளை நியமிக்கப்படவுள்ளார்.

இவருக்கான மீள்நியமனத்தை மிக விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(க)

## மின்சாரம் இன்னும் இல்லை

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் ஆகிய பகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பங்கள் ஆறு மாதங்களிற்கு முன்னரே நடப்பட்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இப்பகுதி மக்கள் வீட்டு மின் இணைப்பு வேலைகளை முடித்து விட்டு கடந்த சில மாதங்களாக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (83)

## கள் விலை உயர்வு

(வரணி)

தென்மராட்சி கிழக்கில் உள்ள தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் கள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து கள்ளுக்கான விலை உயர்ந்துள்ளது.

தென்பகுதியில் இருந்து வரும் பெரும் தொகையானவர்களும் அதிகளவில் கள் கொள்வனவு செய்து கொள்வதாலும், தென்னை மரங்களில் இருந்து மட்டுமே தற்போதைய காலங்களில் கள் பெறப்படுவதாலுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சித்திரை வைகாசி மாதங்களில் ஒரு போத்தல் கள் 12 ரூபாவாக இருந்து வந்தது. தட்டுப்பாடு ஏற்பட்டதனைத் தொடர்ந்து அது 20 ரூபாவாக அதிகரித்துள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (92)

## மதுபோதை அடிதடிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் மதுபோதை நிலையில் நடக்கும் அடிதடிச் சம்பவங்களும், திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகிறது.

.கைதடிப்பகுதியில் இரவு வேளைகளில் இவை சர்வசாதாரண நிகழ்வாகி விட்டனவாம்.

மட்டுவில் பகுதியில் மது போதையில் சென்ற நபர் ஒருவர் கிராம சேவகர் ஒருவரை அவரது கடமை வேளை தக்கியதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மதுபோதையின் பின்னரே குற்றச் செயல்கள் அதிகம் நிகழ்கின்றன என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பல்கலைக்கழகத்தில் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாறுகளைச் சித்திரிக்கும் 'மெய்யுரு' புகைப்படக் கண்காட்சி நாளை 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் 5 மணி வரை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வைத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வைவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார். அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள யாழ். பல்கலைக்கழகக் கலைவட்டம் முதுசம் VIII அழைப்பு விடுத்துள்ளது. (63)


## முக்கிய அறிவித்தல்

### தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுக்கள் தெரிவு தொடர்பானது

மேற்படி பல நோக்குச் சங்கத்தின் கிளைக்குழுக்களின் தெரிவுகள் 10.10.2002 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளப்பரத்திற்கமைய 19.10.2002 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

எனவே வாக்காளர் பட்டியலின்படி அந்தந்த கிளைக்குரிய வாக்காளர்கள், விளம்பரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு குறித்த நேரத்திற்கு தத்தமது கிளைக்குரிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கு சமுகமளித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிகமான வாக்காளர்கள் இடம்பெயர்ந்து வசிப்பதனால் இவ்வறிவித்தலை தங்களுக்குரிய தனித்தனி அறிவித்தலாகவும் ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-060)


# விளையாட்டு

## அடுத்த ஆசிய விளையாட்டுக்களில் கிரிக்கெட்டும் சேர்க்கப்படுமாம்!

(கட்டார்)

2006 ஆம் ஆண்டில் கட்டாரில் நடைபெறவுள்ள 15 ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் கிரிக்கெட் விளையாட்டையும் சேர்த்துக் கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக கட்டாரின் விளையாட்டுத் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

30 இற்கும் மேற்பட்ட விளையாட்டுக்கள் ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன் கிரிக்கெட்டையும் சேர்த்துக் கொண்டால் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய பலம் வாய்ந்த அணிகளின் ஆட்டங்களைக் கண்டுகளிக்க ரசிகர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டில் கிரிக்கெட்டையும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சேர்த்துக் கொள்வதற்கான உயர்ந்த பட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக இப்போட்டிகளை நடதத்துவதற்கான பொறுப்புக்களை ஏற்றுள்ள அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர், செயலாளர் வெளிநாடு பயணம்!

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் என்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை லண்டனில் நடைபெறவுள்ள சர்வதேச உதைபந்தாட்ட நிர்வாகம் பற்றிய பட்டறைக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பட்டறையில் கலந்து கொள்ளும் இரண்டு இலங்கையருள் இவரும் ஒருவராவார்.

அத்துடன் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் எம்.பிரான்ஸிஸ் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை மலேசியாவில் நடைபெறவுள்ள ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர்களுக்கான வேலைத் திட்டத்தில் பங்கேற்பதற்காக செல்லவுள்ளார்.

இப்பயிற்சிக்காக இலங்கையிலிருந்து மேலும் 25 பேர் செல்லவுள்ளதாகவும் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர் கணநாதன் தெரிவித்துள்ளார்.

### கலாசாலை அணிகள் முதலிடம்

யாழ்.கல்வியியற் கல்லூரி நடத்திய குழு விளையாட்டுக்களில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கரப்பாந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு காற்பந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இடம் பெயர்ந்த நிலையில் இயங்கும் இக்கலாசாலை, மைதானம் கூட இல்லாத நிலையில் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (96)

## இன்றைய நாள் இனிய நாள்

**16.10.2002 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | பணவரவு, சுபகாரியங்களில் பங்கு, தெய்வதரிசனம், சமய அறிஞரின் நட்பு, பெண்களால் மகிழ்ச்சி, கல்விச் சமநிலை, வியாபாரம் முன்னேற்றம். |
| இடபம் | :- | பணவரவு, தொழில் முன்னேற்றம், மரியாதை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம். |
| மிதுனம் | :- | பணவரவு, சுபகாரியங்களில பங்கு , வாகன பலன், உறவினர் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம் | :- | பணவரவு குறைவு, உடனலக்குறைவு, தனித்தநிலை, தேவையற்ற மனப்பயம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் | :- | மகிழ்ச்சி, ஆடையாபரண பலன், கௌரவம், கலை நிகழ்ச்சி கண்டு மகிழல், காதலர் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம். |
| கன்னி | :- | பணவரவு, புதிய கடன் வசதி, நோய் நீக்கம், கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

| | | |
|---|---|---|
| துலாம் | :- | பணவரவு, புத்திரமகிழ்ச்சி, தெய்வதரிசன பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் | :- | மாதாவிற்கு சுகயீனம், பணவரவு குறைவு, வாகனச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம். |
| தனு | :- | தேக சுகம் நன்று, எடுத்தகாரியம் வெற்றி,உறவினர் வருகை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம். |
| மகரம் | :- | பணவரவு குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் சண்டை, மனச்சஞ்சலம், கல்வி சமநிலை, வியாபாரம் சமநிலை. |
| கும்பம் | :- | பணவரவு, உறவினர்கள்வருகை, தேகசுகம் நன்று, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம். |
| மீனம் | :- | தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, தேவையற்ற செலவு, கல்வி முன்னேற்றம், வியாபாரச் சமநிலை. |


### வெரித்தாஸ் வானொலி குழுவினருடன் ஒரு சந்திப்பு - "உறவுகளின் சங்கமம்"

உறவுகளின் சங்கமம் நாளை 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறும். வெரித்தாஸ் வானொலி நேயர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள், கேள்விகள் அனைத்தையும் நேரடியாகவே கேட்டு அறிந்து கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம்.

தவறவிடாதீர்கள்.

யாழ்.மறைமாவட்ட
சமூகத் தொடர்பு ஆணைக்குழு.

(சி-063)

# திக்கம் வடிசாலை மீண்டும் வடமராட்சி கொத்தணியிடம் !

இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன் திக்கம் வடிசாலையை வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுவுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் கையளிக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வடமராட்சி கொத்தணி காரியாலய மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த முடிவு எடுக்கப பட்டது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.கணேசமூர்த்தி, தமிழீழ நிர்வாக துணைப் பொறுப்பாளர் பொ.இளஞ்செழியன், மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், நிதிப் பிரிவை சேர்ந்த செல்வரத்தினம்,வி.ஜீ. தங்கவேல் மற்றும் சமாச, கொத்தணி சனசங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது திக்கம் வடிசாலையின் வரலாற்றுப் போக்கு குறித்து விபரிக்கப்பட்டது.

அத்துடன் வடமராட்சிக் கொத்தணியிடம் வடிசாலை ஒப்படைப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துரைக் கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்- வடிசாலை கொத்தணியிடம் ஒப்படைப்பதில் தனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை எனவும் அமைச்சின் சட்டரீதியான எற்பாடுகள் என்ன என அறிந்து வடிசாலையைக் கையளிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இதனைக் தொடர்ந்து வடிசாலையைக் கையளிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த பனை அபிவிருத்தி சபை தலைவரின் தலைமையில் ஐவர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. கி.சிவநேசன், சி.தவராசா, கா.குணராசா, அ.கணேசமூர்த்தி -ஆகியோரும் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

## திருமலை, காஞ்சிரங்குடாப் படுகொலைகள் சமாதானத்துக்கு எதிராக தீர்க்கப்பட்ட வேட்டு

### புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

திருமலையிலும் காஞ்சிரங்குடாவிலும் சாதாரண பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் சமாதானச்சூழலுக்கு எதிராகத் தீர்க்கப்பட்டுள்ள வேட்டுக்களாகும்.

பேச்சுவார்த்தைக்கான இரண்டாம் கட்டநகர்வுகள் முன்னெடுக்கப் படும்போது இத்தகையசம்பவங்கள் நிகழாத உறுதியான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என காஞ்சிரங்குடா, திருமலைச் சம்பங்களைக் கண்டித்து புதிய ஜனநாய கக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

திருக்கோவிலிலும் திருகோணமலையிலும் நடாத்தப்பட்ட ஆயுதப் படைகளின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு, கிரனைட் வீசுச் சம்பவங்கள் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாதவைகளாகும்.

பத்துப்பேரது உயிர்களைப் பலி கொண்டு ஐம்பதுக்கு மேற்பட்டோரைக் காயப்படுத்தியுள்ள மேற்படி தாக்குதல்களின் அடிப்படை பேரினவாத ஆதிக்க வெறித்தனமே யாகும்.

குறிப்பாக கிழக்கின் இரு மாவட்டங்களில் அடுத்தடுத்து இடம் பெற்ற இத்தாக்குதல்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் சமாதான சூழலுக்கும் எதிராகத் தீர்க்கப் பட்டுள்ள வேட்டுக்களேயாகும். சாதாரண மக்களைக் குறிவைத்து நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களையும் கோரப்படுகொலைகளையும் புதிய ஜனநாயககட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கான இரண்டாம் கட்டநகர்வுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் சூழலில் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் நிகழாத உறுதியான நிலை தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்பதையும் எமது கட்சி வற்புறுத்துகின்றது.

தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்தத்தையும் அதன் மூலமான சமாதான சூழலையும் குழப்பிக்கொள்ள சமாதான விரோத சக்திகள் தருணம்பார்த்து காத்திருந்து வருகின்றன.

பேரினவாத யுத்த விரும்பிகளும் யுத்தத்தின் மூலம் அரசியல் பொருளாதார லாப மீட்டியவர்களும் சமாதானம் நீடிப்பதை விரும்பவில்லை. சில வெளி நாட்டுச்சக்திகளும் தத்தமது மறைகரங்கள் மூலம் சமாதானத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் குழிபறிக்க செயலாற்றி வருகின்றன.

எனவே அரசாங்கமும் புலிகள் இயக்கமும் அரசியல் தீர்வுகான பேச்சுவார்த்தையை விரைவுபடுத்தி உறுதியான முடிவுகளுக்கு வருவதன் மூலமே குழப்பவாத சக்திகளைத் தோற்கடிக்க முடியும்.

அதேவேளை வட கிழக்கின் மக்கள் புதிய சூழலில் மிகுந்த நிதானத்துடனும், பொறுப்புடனும் நடந்து கொள்வது அவசியமானதாகும். சமாதானத்தைக் குழப்பநிற்கும் தீயசக்திகளுக்கு சந்தர்ப்பம் வழங்காதவாறு பார்த்துக்கொள் வது மக்கள் முன் உள்ள கடமையுமாகும் என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கோவிலுக்குச்சென்ற சிறுவனைப் பாம்பு தீண்டியது

நவராத்திரி விழாவில் கலந்து கொள்ள ஆலயத்திற்குச்சென்ற சிறுவன்ஒருவன் பாம்புக்கடிக்கு ஆளாகினான். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8மணிக்கு மண்டை தீவில் இடம்பெற்றது.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் லக்கீசன் என்ற 8 வயதுச் சிறுவனே இவ வாறு பாதிக்கப்பட்டவராவார். இவர் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார். (54)

# பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் இரண்டு மாடி நவீன சந்தைக் கட்டடம்

பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் நவீன சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் பஸ்நிலையப் பகுதியில் இரண்டு மாடிகளைக் கொண்ட சந்தைக்கட்டடம் அமைப்பதற்க்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கையால் நகராட்சி மன்றம் இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் இதன் ஆரம்ப கட்டமாக மரக்கறிச் சந்தைப்பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான நிலங்களை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இவ்விடத்திலேயே பஸ் நிலையத்தை அமைக்கவுள்ளதாக இது தொடர்பான திட்டவளப்படங்கள் தயாரிக்கப்பட்டு முடிந்து விட்டதாகவும் நகராட்சி மன்ற செயலாளர் தெரிவித்தார். (15)

## சமாதானத்துக்கான மக்கள் குழு தமிழகப் பிரதிநிதிகள் யாழ்.வருகை

(பாஸ்சையூர்)

இந்தியாவை சேர்ந்த சமாதானத்திற்கான மக்கள் குழு அமைப்பைச்சேர்ந்த பிரதிநிகள் யாழ். மெதடிஸ்த திருச்சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளனர். இக்குழுவில் சமாதானத்தின் முக்கியத்துவத்தை மக்கள் முன் எடுத்துரைக்கவும் சென்னை மெதடிஸ்த திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய கலாநிதி வி.தேவசகாயம், எதிராஜ் கல்லூரிப் பேராசிரியரும் பெண்கள் உரிமை அமைப்பைச் சேர்ந்தவருமாகிய கலாநிதி சி.சரஸ்வதி, மக்கள் குழு அமைபபைச் சேர்ந்த பேராசிரியர் ஐதேவசகாயம ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இங்கு தங்கியிருக்கும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதி நிகள், பலாலி இராணுவ உயர் அதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதத தலைவர்கள், யாழ் பல்கலைக்கழக கல்விமான்கள், மற்றும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப்பிரதி நிதிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமாதானத்திற்கும் நல்லெணணத்திற்குமான மக்கள் குழு பிரதிநிதிகள் ஆகியோரை தனித்தனியாக சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி கலந்துரையாடவுள்ளனர். (106)

## கல்வி கற்க வசதியற்ற சிறுவர்களுக்கு உதவும் திட்டம் சனியன்று ஆரம்பம்

### சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு

(பாசையூர்)

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் பெற்றோரை இழந்த, உழைப்பாளி, நோயுற்ற மற்றும் வறுமைக்குட்பட்டு உறவினருடன் வாழும கல்வி கற்பதில் ஆர்வமுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உதவ முன்வந்துள்ளது. இதன் முதற் கட்டமாக நிலையத்தால் ஏற்கனவே இனங் காணப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் ஆரம்பநிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நிலையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராஜா, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் , யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.(106)

## நாற்றுமேடை அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினைப் பகுதி விவசாயிகள் நாற்று மேடை அமைப்பதில் கூடிய ஆர்வம் காட்டுகின்றனர்.

பருவ மழை ஆரம்பித்ததை அடுத்து, புகையிலை, மிளகாய், கத்தரி மற்றும் தக்காளி நாற்று மேடைகளை அமைத்து வருகின்றனர்.

மேலும் இப் பகுதிகளில் பெரும் போகச் செய்கைக்கு ஏற்ற தயார்ப் படுத்தல் இடம் பெறுவதுடன், கோவா நாற்றுக்கள் நடப்பட்டு விட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(83)

## சின்னஞ் சிறு செய்திகள்

### இளைஞரைத் தாக்கிப் பணம் அபகரிப்பு

வீதியால் நடந்துவந்துகொண்டிருந்த இளைஞனை தாக்கி விட்டு அவரிடம் இருந்து பணத்தைப் பறித்தெடுத்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொட்டடியில் இருந்து முனியப்பர் கோவிலடியால் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞரைப் பின்தொடர்ந்து வந்த மூவர் பிரதான வீதி, 1 ஆம் குறுக்குச்சந்தியில் வைத்து இளைஞரைத் தாக்கி அவரிடம் இருந்த 850 ரூபாவை பறித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.

இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த யுகதீஸ்வரன் என்பவரே இவ்வாறு பணத்தை பறிகொடுத்தவர் ஆவார். (54)

### மறைக்கல்வித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை மறைக்கோட்ட மாவட்டத்தினால் அனைத்துப் பாடசாலைகளிலும் கிறிஸ்தவ மாணவர்களுக்கான மறைக் கல்வித்தேர்வு நடைபெறும் என மறைக்கல்வி நிலையம் அறிவித்துள்ளது. அத்துடன் இதில் அனைத்து கிறிஸ்தவ மாணவர்களும் இத்தேர்விற்கு தோற்றும்படி கோரப்பட்டுள்ளது. இத் தேர்வு 6 - 11 ஆண்டுகளுக்கு வகுப்பு ரீதியாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (61)

### மரத்திலிருந்து விழுந்த சிறுவன் படுகாயம்

நாவற்பழம் பிடுங்க மரத்தில் ஏறிய சிறுவன் தவறி விழுந்து இடது கை முறிந்தது.

இச்சம்பவத்தில் நாவற்காடு வரணியைச் சேர்ந்த பா.பாலரூபன் என்ற சிறுவனே - இடது கை முறிந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்(27)

### ஆற்றுகை

நாடக அரங்கக் கல்லூரியின் சான்றிதழ் கற்கை நெறி - 2002 யினைப் பூர்த்தி செய்யும் முகமாக களம் காணவுள்ள சாந்தினி பத்மநாதனின் "கானலில் வாழும் கனவுகள்" ஆற்றுகை எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள் ளது. (63)

### ஆசிரியகலாசாலை கல்விக் கண்காட்சி

(சுண்டுக்குளி)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் -2002ற்கான கல்விக் கண்காட்சி 17ஆம், 18ஆம் திகதிகளில் மு.ப 9.30-4.30 வரை நடைபெறவுள்ளது.

ஆரம்பக்கல்வி, சித்திரம், மனைப் பொருளியல், தமிழ், உளவியல், நடனம், சங்கீதம், இந்துசமயம், தகவல்தொழில்நுட்பம், ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக இக் கண்காட்சி நடைபெறும். (103)

### சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான - எழுத்துப் பரீசை பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறவுள்ளது.

கடந்த 12ஆம் திகதி நடாத்தப்படாத எழுத்துப்பரீட்சை 19 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதே வேளை இம் மாதம் 12ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை, நடைபெறவிருந்த செயன்முறைப் பரீட்சை - தவிர்க்க முடியாத காரணத்தால் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறமாட்டாது எனவும்,

13 ஆம் திகதி நடைபெற்ற எழுத்துப் பரீட்சை பெறுபெறுகளும் - அவ்களுக்கான செயன்முறைப் பரீட்சை விபரங்களும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சதாம் ஆட்சியில் நீடிப்பதா? வேண்டாமா?
# ஈராக்கில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு!

உலகவலம்

(பக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசையின் இன்னும் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் ஆட்சியில் இருப்பதா என்ற கேள்விக்கு, ஆமா? இல்லையா?என்ற விடையை தீர்மானிக்கும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

கடந்த தடவை இவ்வாறான ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பில் சதாம் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க வேண்டுமா என்ற வினாவுக்கு ஈராக்கிய வாக்காளர்களில் 99.96 % ஆனவர்கள் 'ஆம்' என்றே வாக்களித்திருந்தனர்.

அமெரிக்க அரசாங்கம் சதாமை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்குரிய போர் ஒன்றை ஆயத்தம் செய்யும் இவ்வேளையிலும் சதாமின் ஆட்சி நீடிக்க வேண்டுமா? என்ற வினாவுக்கு ஈராக்கிய மக்கள் மீண்டும் 'ஆம்', 'ஆம்', 'ஆம்.....' என்றே வாக்களிப்பார்கள் என்றும் வாக்கெடுப்பில் சதாம் வெற்றியடைவது உறுதியான விடயம் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு முகத்தில் விழும் அடியாகும் என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர். நேற்று நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்புக்கு முன்னோடியாக மாபெரும் பேரணியில் ஈராக்கியர்கள் பங்குபற்றினர்.

"சதாம் ஹுசைன் வாழ்க!"

"ஜோர்ஜ் புஷ் ஒழிக!" என்று உரத்துக் கத்தியும் ஆடியும் பாடியும் எழுச்சிகரமாக சென்ற அந்தப் பேரணியில் நீக்கமற எங்கும் சதாமின் பெரிய படங்களை ஆண்களும் பெண்களும் சுமந்து சென்றனர்.

ஒரு வாரகால ஆயத்த நடவடிக்கைகளுடன் நடைபெற்ற நேற்றய அபிப்பிராய வாக்கெடுப்பு ஈராக்கிய மக்களுக்கு ஒரு எழுச்சிகரமான நாளாக இருந்தது என ஐரோப்பிய ஊடகவியலாளர் ஒருவர் பாக்தாத்திலிருந்து தெரிவித்தார்.

ஏறத்தாழ பதினொன்றரை மில்லியன் வாக்காளர்கள் பங்குபற்றும் அபிப்பிராய வாக்கெடுப்பாக இது இருக்கும்.

'ஆம்', 'இல்லை' எனக்குறிக்கப்பட்ட பெட்டிகள் வாக்கெடுப்பு நிலையங்களில் வைக்கப்பட்டிருந்தது என்றும் சதாமின் படம் பொறிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன என்றும் தமது முடிவுக்கு இணங்க வாக்காளர்கள் உரிய பெட்டியில் வாக்குகளை போட்டார்கள் என்றும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.



குவைத்தில் கடற்தளப் பயிற்சிக்காகச் செல்லும் அமெரிக்கச்சிப்பாய்

# இந்தோனேசிய குண்டுத் தாக்குதலுக்கும் அல்கொய்டாவுக்கும் தொடர்புள்ளது!!

(வோஸிங்ரன், சிட்னி)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், இந்தோனேசியக் கார்க்குண்டு வெடிப்புக்கும் அல்கெய்டா சர்வதேச வலைப்பின்னலுக்கும் தொடர்புகள் இருப்பதாக தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

அவ்வாறு தான் நம்புவதற்கு என்ன காரணங்கள் என்று புஷ் தெரிவிக்கவில்லை என்று செய்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அண்மையில் யேமனில் பிரான்ஸ் கப்பல் தாக்கப்பட்டமை, குவைத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பலின் பயிற்சியின் போது நடத்தப்பட்ட துப்பாகித் தாக்குதல் , இந்தோனேசியக் குண்டு தாக்குதல் ஆகியன அனைத்தும் அல்கெய்டா பயங்கரவாதத் தொடர்புடன் மேற்கொள்ளப்பட்டவை என்றும் தெரிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி.

இச்சம்பவங்கள் மூலமாக உலகம் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய புஷ், ஈராக் நாட்டின் கொடூரத்தலைவர் சதாம் ஹுசைன் போன்றவர்களிடமிருந்து விரைவில் ஆயுதங்கள் அனைத்தும் களையப்படுவதோடு சர்வதேச



மேகவதி சுகர்ண புத்ரி தனது ஆயுதப்படைகளின் தலைமைகளுடன்

ரீதியில் மிக அவசரமாக பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

இந்தோனேசியத் தலைவர் மேகவதி சுகர்ண புத்ரியுடன் தொலைபேசிமூலம் உரையாற்றிய புஷ் சகல ஒத்துழைப்புக்களையும் அமெரிக்கா வழங்குமென்றும், ஈவிரக்கமற்ற முறையில் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில்

ஜோர்ஜ் டபிள்யூ புஷ்



அறைகூவல் விடுக்கும் அமெரிக்க ஜனாதிபதி

இந்தோனேசியாவின் பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு தாக்குதலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் இத்தாக்குதலை காரசாரமாகக் கண்டித்துள்ளனர்.

அவுஸ்த்திரேலியர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இன்னும் அதிக எண்ணிக்கையானோர் காணமல் போயுள்ளனர். தமது அன்புக்குரிய உறவுகளைத்தேடுவதற்காக சோக மயமாகக் காட்சிதரும் பாலித்தீவுக்கு ஏராளமான அவுஸ்த்திரேலியர்கள் வருகை தருகின்றனர்.

இத்தாக்குதலில் இருநூறுக்கும் அதிகமான உல்லாசப்பயணிகள் மடிந்தது வாசகர் அறிந்ததே. மேலும் காயமடைந்த உள்ளூர் மக்கள் நூறுபேர் உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

அவுஸ்ரேலிய பிரதமரும் அல்கெய்டா மீது கடுமையான சந்தேத்தை வெளியிட்டுள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அவுஸ்த்திரேலியா சந்தித்த பெரும் மனித அழிவு இதுவாகும். அங்கு தேசிய துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. தாக்குதலில் காயப்பட்டு நடக்கக்கூடியவர்கள் விமானம் மூலம் சிட்னிக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்கள் பயங்கரத்தின் அதிர்ச்சி, ஏக்கம என்வற்றிலிருந்து மீளாதவர்களாகக் காணப்பட்டனர்.

# கொக்கா கோலாவுக்கு பிரியாவிடை ! மெக்கா கோலாவுக்கு வரவேற்பு !!

அரபு நாடுகளில் நிலவும் அமெரிக்க எதிர்ப்பைப் பயன்படுத்தி அமெரிக்காவின் பானம் என வர்ணிக்கப்படும் கொக்காகோலாவுக்கு பிரியாவிடை கொடுக்கும் திட்டமொன்றை பிரான்ஸ் தொழிலதிபர் ஒருவர் அமுலாக்கவுள்ளார்.

அமெரிக்க உற்பத்திகளை அரபுக்கள் எதிர்க்கவேண்டும் என்று கேட்கும் அவர் மெக்கா கோலா என்ற புதிய பானமொன்றை தனது நிறுவனம் தயாரித்து அரபு நாடுகளில் அறிமுகப்படுத்தவுள்ளதாக கூறுகின்றார்.

இது வர்த்தக நோக்கம் மட்டும் உடையதல்ல என்றும் இந்த உற்பத்தியில் அரசியல் நோக்கமும் உள்ளது என்றும், இவ் விற்பனை மூலம் வரும் இலாபத்தில் 10 % ஐ பலஸ்தீனத்தில் வாழும் சிறுவர் சிறுமியரின் கல்வி வளர்ச்சிக்குத் தான் வழங்கப் போவதாகவும் பிரான்ஸ் தொழிலதிபர் தெரிவித்தார்.

'மெக்கா' என்பது முஸ்லிம்களின் புனித நகர் என்ற காரணத்தால் தான் இப் பெயரை இடவில்லை என்றும் பிரெஞ்சு மொழியில் 'மெக்கா' என்ற சொல்லுக்கு மகிழ்ச்சிகரமான கருத்தே உள்ளதாகவும் தெரிவித்தார் .

# வட அயர்லாந்தில் மீண்டும் பிரிட்டனின் நேரடி நிர்வாகம்!

(லண்டன்)

வட அயர்லாந்துக்கான அதிகாரப் பகிர்வுச் சபையை பிரிட்டிஷ் அரசாங்கம் கலைத்தது.

வட அயர்லாந்தின் நிர்வாகம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.



சின்பெயின் தலைவர்

இதற்கு முன்னரும் நான்கு தடவைகள் இச் சபை கலைக்கப்பட்டது.

ஐ.ஆர்.ஏயின் இராணுவப்பிரிவுகள் மற்றும் அதன் அரசியல் பிரிவான சின்பெயின ஆகியவற்றின் உடன்பாட்டு மீறல்கள் தீவிரமாகி விட்டதனால் இம்முடிவை எடுக்க வேண்டியதாயிற்று என பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்தது.



பிரிட்டிஷ் பிரதமர்

ஐ.ஆர்.ஏ இன் இராணுவப் பிரிவுகள் .ஆயுதங்களை ஒப்படைப்பதில் இழுத்தடித்து வருகின்றன என்றும் அண்மையில் வட அயர்லாந்தின் அரச அலுவலகமொன்றில் உளவு வேலைகளில் ஈடுபட்டு தகவல்களை வெளி நாடுகளுக்கு விற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சின்பெயின் அங்கத்தவர் ஒருவர் பிரிட்டிஷ் பொலிசாரிடம் அகப்பட்டுள்ளார் என்றும் பிரிட்டன் அறிவித்திருந்தது.

# அமெரிக்க மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல நாங்கள் பாகிஸ்தான் இஸ்லாமிய கட்சியின் தலைவர் தெரிவிப்பு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள பாகிஸ்தானின் இஸ்லாமியக் கூட்டுக்கட்சிகள், முஷாரவின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (காய்தே-இ-அசம்) உடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முடியுமா? என்று ஆராய்ந்து வருகின்றன.

தலிபான் ஆதரவான இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சிகளின் இக்கூட்டணி முஷாரப்புடன் எவ்வாறு கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கப் போகின்றன என்பது வினாவாகவே தொக்கிநிற்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றன.

இக்கட்சிகளின் சார்பில் கருத்துத் தெரிவித்த குஆசி ஹுசைன் யாருடன் சேர்ந்து தாம் கூட்டாட்சி அமைப்பது என்ற விடயத்துக்கு ஓரிரு நாட்களில் விடைகிடைத்துவிடும் எனத்தெரிவித்தார்.



ஆறு அடிப்படைவாத இஸ்லாமியக் கட்சிகளின் கூட்டமைப்பின் துணைத்தலைவர் குஆசி ஹுசைன் அகமட்

தாங்கள் அமெரிக்காவுக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டை மறுத்த குஆசி ஹுசைன் அமெரிக்க மக்களுக்கு எதிரான நிலைப்பாடு தங்களிடம் கிடையாது என்றும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகளையே எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

# பாலித்தீவு குண்டுவெடிப்பு விசாரணைகள் துரிதகதியில்

இந்தோனேசியாவில் பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக முப்பதுபேர் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் பத்துப்பேர் பாகிஸ்தானியர்கள்.

மேலும் குண்டுவெடித்த இடத்திலிருந்து எடுத்த அடையாள அட்டையும் விசாரணைகளுக்கு உதவுகிறது என்று தெரியவருகிறது.

அவுஸ்திரேலியா ஏற்கனவே தனது விசாரணையாளர்களை அனுபபியுள்ளது. அத்துடன் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளும் விசாரணையில் உதவுகின்றன.

அதேவேளை இந்தோனேசியாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பும் தொடர்ந்து இடம்பெறும் விசாரணைக் கெடுபிடிகளும் இந்தோனேசியாவின் உல்லாசப் பிரயாணத்துறையை முழுமையாகப் பாதித்துள்ளன.

இந்தோனேசியப் பொருளாதாரம் உல்லாசப் பிரயாணத் துறையில் பெரிதும் தங்கியிருக்கிறது.

# இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் படைக்குறைப்பு சாத்தியமாகுமா?

(டில்லி)


இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள இரு நாட்டுப் படைகளையும் குறைத்து பதற்றத்தைத் தவிர்க்க இரு நாடுகளும் முயறசிக்கின்றன எனத் தெரியவருகிறது.

இரு நாட்டையும் சேர்ந்த பத்து லட்சம் துருப்புக்கள் எல்லையோரமாக நிலைகொண்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத்தெரிவித்த இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரியும் இராணுவ ஆய்வாளருமான ஜெனரல் இராகவன், படைகளை எல்லைகளிலிருந்து குறைத்தல் எச்சரிக்கையுடன் கவனமாகச் செய்யப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை 2002 டிசம்பர்

# விஞ்ஞானமும் தொழினுட்பமும் I



## பயிற்சிப் பரீட்சை





# மாணவர் மலர்

1. ஆரம்ப காலத்தில் நியம மூலகமாக பயன் படுத்தப்பட்டது எது?
   1) காபன் 2) ஒட்சிசன் 3) ஐதரசன் 4) அயடீன்
2. ஐதரசன் அணுவொன்றின் திணிவு?
   1) $1.67x10^{-24}$ 2) $1.99x10^{23}$
   3) $1.99x10^{-23}$ 4) $4.03x10^{-23}$
3. $(NH4)_2So_4$ இல் அடங்கியிருக்கும் நைதரசனின் சதவீதத்தை சரியாகக் குறிப்பது?
   1) 21.21% 2) 10.6% 3) 27.27% 4) 50%
4. குமிழம் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்?
   1) இஞ்சி 2) வெங்காயம்
   3) அன்னாசி 4) சேம்பு
5. தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய், நீர் ஆகிய திரவங்களை அவற்றின் கொதிநிலை அதிகரித்துச் செல்லும் ஒழுங்குக்கு அமைய வரிசைப்படுத்தும் போது கிடைக்கும் ஒழுங்கு முறை யாது?
   1) தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய், நீர்
   2) மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய், நீர்
   3) நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய்
   4) மண்ணெண்ணெய், நீர், தேங்காயெண்ணெய்
6. பன்சன் சுடரடுப்பினால் கடுமையாக வெப்பமேற்றும் போது கூட பிரிகையடையாத பொருள் எது?
   1) கல்சியம் காபனேற்று
   2) சோடியங் காபனேற்று
   3) அமோனியம் நைத்திரேற்று
   4) ஈய நைத்திரேற்று
7. சதைக்கரைச்சானின் பதியப் பகுதி எது?
   1) இலை 2) வேர் 3) விதை 4) முள்
8. பின்வருவனவற்றுள் எது வெப்பமேற்ற வாயுவைத் தரும்?
   1) செப்பு நைத்திரேற்று
   2) ஈய நைத்திரேற்று
   3) செப்புக் காபனேற்று
   4) பொற்றாசியம் நைத்திரேற்று
9. அருகில் தரப்பட்டிருக்கும் உருவின் குறியீடு சரியாகக் குறிப்பது?




   1) pnp திரான்சிஸ்ரர் 2) npn திரான்சிஸ்ரர்
   3) இருவாயி 4) கொள்ளளவி
10. வீட்டு மின் சுற்றில் உருகிகளையும் ஆளிகளையும் தொடுக்க வேண்டிய திருத்தமான முறை?
    1) உருகி உயிர்க்கம்பியுடன், ஆளி நொதுமற் கம்பியுடன்
    2) உருகி நொதுமற்கம்பியுடன், ஆளி உயிர்க் கம்பியுடன்
    3) உருகி, ஆளி ஆகிய இரண்டும் உயிர்க்கம்பியுடன்
    4) உருகி, ஆளி ஆகிய இரண்டும் நொதுமற் கம்பியுடன்
11. மண் உண்டாகும் போது பாறைகளில் வானிலை காரணமாக நடைபெறும் பௌதீக முறை அழிதலுடன் தொடர்புபட்ட செயற்பாடு எது?
    1) பாறைகளுடன் அமிலங்கள் தாக்கம் புரிதல்.
    2) பாறைகள் மீது பங்கசு தாக்கம் புரிதல்.
    3) பாறைகள் கடுமையாக வெப்பமாகி குளிர்ச்சியடைதல்.
    4) மண்ணில் வாழும் உயிரினங்கள் பாறைப் பகுதிகளை உணவாகக் கொள்ளல்.
12. ஒலி எதனூடாக விரைவான கதியுடன் ஊடுகடத்தப்படும்?
    1) வெற்றிடத்தினூடாக
    2) வாயுவினூடாக
    3) திரவத்தினூடாக
    4) திண்மப்பொருளினூடாக
13. ஒரு தடையியின் முனைகளுக்கிடையே உள்ள அழுத்த வித்தியாசம், அதனூடாகப் பாயும் மின்னோட்டம் ஆகிய இரண்டையும் அளவிடுவதற்கு உபகரணங்கள் தொடுக்கப்படும் சரியான முறை?






14. 


    இத்தடைத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு தடையும் 3Ωம் எனின் x,y இற்கிடையேயான சமவலுத் தடை யாது?
    1) 3Ω 2) 6Ω 3) 2Ω 4) 8Ω
15. ஒரு பந்தானது கீழிருந்து மேல் நோக்கி எறிந்த போது அது நிலத்தை வந்தடையும் வரையிலான வேக-நேர வரைபை சரியாகக் காட்டுவது?





16. குளோரைட்டு அயனின் (cl-) இலத்திரன்களின் எண்ணிக்கை பின்வரும் எந்த அயனின் இலத்திரன் எண்ணிக்கைக்குச் சமன்?
    1) Na+ 2) K+ 3) O⁻⁻ 4) mg++
17. திரவமொன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
    1) திரவத்தின் அடர்த்தி
    2) திரவத்தின் கனவளவு
    3) ஈர்வையிலான ஆர்முடுகல்
    4) சுயாதீனப் பரப்பிலிருந்து அப்புள்ளியின் ஆழம்.
18. ஐதரசன் பரவொட்சைட்டிலிருந்து ஒட்சிசனைப் பெறப் பயன்படுத்தப்படும் ஊக்கி?
    1) இரும்பு
    2) அலுமினியம் ஒட்சைட்டு
    3) மங்கனீரொட்சைட்டு
    4) பொட்டாசியம்
19. இறப்பரின் இயல்பு அல்லாதது?
    1) இழுபடும் தன்மை
    2) நீரை உறிஞ்சிக்கொள்ளாமை
    3) மின்காவலித்தன்மை கொண்டது
    4) அதிர்ச்சியினை உறிஞ்சாத்தன்மை
20. இறப்பர் வல்கனைசுப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் மூலகம்?
    1) Mg 2) S 3) Na 4) K
21. பொலித்தீனின் கட்டமைப்பு எது?
    1) 2) 3) 4)



22. 


    மூவூசிச் செருகி ஒன்றின் அமைப்பு இங்கு தரப்பட்டுள்ளது. இதில் 1,2,3 ஆகிய இலக்கங்கள் குறிப்பது முறையே?
    1) உயிர்க்கம்பி, நொதுமல் கம்பி, புவிக்கம்பி
    2) புவிக்கம்பி, நொதுமல் கம்பி, உயிர்க்கம்பி
    3) புவிக்கம்பி, உயிர்க்கம்பி, நொதுமல் கம்பி
    4) உயிர்க்கம்பி, புவிக்கம்பி, நொதுமல் கம்பி
23. கருங்கற்பாறையில் காணப்படும் கனியம் எது?
    1) இல்மனைட்டு 2) சிலிக்கன்
    3) பெல்ஸ்பார் 4) காரீயம்
24. திண்மம் ஒன்றின் அடர்த்தி $3000Kgm^{-3}$. நீரின் அடர்த்தி $1000Kgm^{-3}$. திண்மத்தின் சாரடர்த்தி யாது?
    1) 1/3Kgm-3 2) 1/3 3) -3 4) $3\ kgm^{-3}$
25. ஒலி அலை ஒன்றின் மீடிறன் அதிகரிக்கப்படும் போது கேட்கும் ஒலியின்
    1) சுருதி அதிகரிக்கும் 2) உரப்பு அதிகரிக்கும்
    3) பண்பு மாற்றமடையும் 4) கதி அதிகரிக்கும்
26. முழுவுட்தெறிப்புத் தோற்றப்பாட்டைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?





27. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் 1M மூலத்திறனுடைய சோடியம் காபனேற்றுக் ($Na_2Co_3$) கரைசல் கிடைக்கப் பெறும்? (Na-23, C-12, O-16)
    1) 53g $Na_2Co_3$ ஐ 500ml நீரில் கரைத்தல்
    2) 26.5g $Na_2Co_3$ ஐ 500ml நீரில் கரைத்தல்
    3) 53g $Na_2Co_3$ ஐ சிறிதளவு நீரில் கரைத்து மொத்தக் கனவளவு 500ml ஆகும் வரை ஐதாக்குதல்
    4) 26.5g $Na_2Co_3$ ஐ சிறிதளவு நீரில் கரைத்து மொத்தக் கனவளவு 500ml ஆகும் வரை ஐதாக்கல்
28. மனிதக் குருதிச்சுற்றோட்டத் தொகுதியின் எந்த நாளத்தில் ஒட்சியேற்றப்பட்ட குருதி அடங்கி இருக்கும்?
    1) நுரையீரல் நாளம் 2) முற்பெருநாளம்
    3) பிற்பெருநாளம் 4) ஈரல் வாயிநாளம்
29. 10 மூலக்கூற்று மூல் நீரில் அடங்கியுள்ள மூலக்கூறு களின் எண்ணிக்கை யாது?
    1) $\frac{6.023x10^{23}x18}{10}$ 2) $6.023x10^{23}x10$
    3) 6.023x10 4) $\frac{6.023x10^{23}X10}{18}$

**சிவப்பிரகாசம் பாலச்சந்திரன்**
**யா/பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை**
**சித்தன்கேணி.**

30. ஒருவரிடம் செவிட்டுத்தன்மை உண்டாவதற்கு பின் வரும் காரணிகளில் எது கூடிய செல்வாக்குச் செலுத்துகிறது?
    1) புறச்செவி சிறிதாக இருத்தல்
    2) செவிப்பறை மென்சவ்வு சேதமடைதல்
    3) செவிப்பறை மென்சவ்வு தடித்திருத்தல்
    4) நடுச்செவியின் சிற்றென்புகள் தடித்திருத்தல்
31. திண்மப்பொருள் ஒன்றின் 1 Kg ஐ எடுத்து அதனை வெப்பநிலையில் மாற்றம் ஏற்படாதவாறு திண்ம நிலையிலிருந்து திரவ நிலைக்கு மாற்றத் தேவையான வெப்பத்தின் அளவு அத்திண்மத்தின்
    1) உருகுநிலையாகும்
    2) தன்வெப்பக் கொள்ளளவாகும்
    3) உருகலின் தன்மறைவெப்பம்
    4) உறைதலின் தன்மறைவெப்பம்
32. தாவரப் பகுதியொன்றின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பருமட்டான வரிப்படமொன்று இங்கு தரப்பட்டுள்ளது. இத்தாவரப் பகுதி பின்வருவன வற்றுள் எது?




    1) புல்லின் தண்டு 2) புல் வேர்
    3) அவரைத்தண்டு 4) அவரை வேர்
33. அங்கிகள் ஒரே இனத்தைச் சேர்கின்றமைக்கான காரணம்?அவை
    1) ஒரே பிரதேசத்தில் ஒரே சூழலில் வாழ்கின்றமை
    2) ஒத்தபோசணைத் தேவைகளை கொண்டிருத்த லாகும்
    3) உயிர்த் தொழிற்பாடுகளுக்காக இடைத்தொடர்பு களைக் கொண்டிருத்தலாகும்.
    4) இடைப்பிறப்பாக்கம் மூலம் வளமான எச்சங் களை தோற்றுவிக்கக்கூடிய தன்மையை கொண்டிருத்தலாகும்
34. முதலுற்பத்தியாக்கி எனக்கருதக்கூடியது யாது?
    1) உக்கிய மரக்குற்றி ஒன்றில் உள்ள காளான்
    2) பூப்பாத்தியொன்றினுள் காணப்படும் பூச்சிகள்
    3) குளம் ஒன்றிலுள்ள தாமரை நாற்றுக்கள்
    4) காயம் ஒன்றிலுள்ள பற்றீரியாக்கள்
35. கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவம் தங்கியுள்ள காரணி அல்லாதது?
    1) தட்டுக்களுக்கிடையேயான பரப்பு
    2) தட்டுகளுக்கிடையேயான தூரம்
    3) தட்டுகளுக்கிடையேயான மின்னுழையம்
    4) மின் அழுத்தம்
36. நீரினுள் அலையொன்று செல்லுகையில்
    1) நீர்த்துணிக்கைகளில் எவ்வித இயக்கமும் நிகழ்வதில்லை
    2) நீரும் அலையுடன் செல்லும்
    3) அலையானது சக்தியை கொண்டு செல்கிறது.
    4) நீர்த் துணிக்கைகள் செல்வதோ சக்தி கொண்டு செல்வதோ நடைபெறுவதில்லை
37. இயற்கைத் தேர்வுக் கொள்கையில் கூர்ப்பை விளக்கியவர்?
    1) அல்பிரட் 2) டாவின்
    3) ஸ்ரீபன் 4) நியூட்டன்
38. 6m உயரமுள்ள ஒரு லொறியில் 4m நீளமுள்ள சாய் தளமும் 600N நிறையுமுள்ள W என்னும் சுமை ஏற்றப்பட்டது. 200N ஊக்க விசை பிரயோகிப்பின் சாய்தளத்தின் திறன் யாது?
    1) 25% 2) 100% 3) 75% 4) 45%
39. 


    மேற்படி இரு விசைகளும் சமநிலையில் இருப்பின் xன் பெறுமானம் யாது?
    1) 20m 2) 40m 3) 30m 4) 60m
40. மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை மனிதனில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் சில காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
    a) அதில் பூரண தகனமடையாத வாயுக்கள் அடங்கியிருத்தல்.
    b) அதில் காபனோரொட்சைட்டு, கந்தக வீரொட்சைட்டு ஆகிய வாயுக்கள் அடங்கியிருத்தல்.
    c) அதிலடங்கியுள்ள காபனோரொட்சைட்டு குருதியிலடங்கியுள்ள ஈமோக் குளோபினுடன் தாக்கம் புரிதல்.
    d) அதிலடங்கியுள்ள கந்தகவீரொட்சைட்டுவாயு கண்களையும் சீத மென்சவ்வுகளையும் சேதப்படுத்தல் இவற்றுள்
    1) a மாத்திரம் சரியானது
    2) aயும் bயும் மாத்திரம் சரியானவை
    3) a, b, c ஆகிய மாத்திரம் சரியானவை
    4) a, b, c, d ஆகிய அனைத்தும் சரியானவை


(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

(e) 1) ∠pst ன் இருகூறாக்கி sp ஆயின் ∠x, ∠yன் பெறுமானத்தைக் காண்க.





2) பொதுப்புள்ளி ஒன்றிலிருந்து வட்டத்துக்கு வரையப் படும் தொடலிகளில் தேற்றத்தை எழுதுக.

2. உருவில் காட்டப்பட்ட உருளையின் வெளிவிட்டம் 28 cm உம் 60cm உயரமும் உடையதாகும். அதன் மையப் பகுதியில் 7cm விட்டமுள்ள துவாரம் உள்ளது
   1) உருளையில் மொத்த மேற்தளப் பரப்பளவு யாது?
   2) உருளையின் மொத்தக் கனவளவு யாது?
   3) உருளையின் துவாரத்தில் தேங்கி நிற்கக் கூடிய நீரின் அளவு யாது?




3. உருவில் காட்டப்பட்டவாறு வட்டத் தட்டொன்றில் சமமான ஐந்து ஆரைச்சிறைகள் பிரிக்கப்பட்டுள்ளன. அதன் மையத்தினில் சுழலக்கூடிய அம்புக்குறி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. தட்டின் ஒவ்வொரு ஆரைச் சிறைகளுக்கும் 1,2,3,4,5, என எண்ணிடப்பட்டுள்ளது. அம்புக்குறியானது நான்கு தடவைகள் சுழலவிடப்பட்டது.
   1) நான்கு தடவைகளும் அம்புக்குறி மூன்று என்ற இலக்கத்துக்கு ஓய்வுக்கு வருவதற்கான நிகழ்தகவு யாது?
   2) நான்கு தடவையும் ஒற்றை எண் ஒன்றில் ஓய்வுக்கு வருவதற்கான நிகழ்தகவு யாது?
   3) மூன்று தடவைகள் மட்டும் ஐந்து என்ற இலக்கத்திற்கு ஓய்வுக்கு வருவதற்கான நிகழ்தகவு யாது?




**பொ.சூரியபிரகாஸ்**
**யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை.**

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD.-LEVEL) EXAMINATION (NEW SYLLABUS)

## INTERNATIONAL LANGUAGE (SECOND LANGUAGE) - ENGLISH

### PART 1

*Answer All the questions on this paper itself*

(1) The following sentences go together to form a story. But they are in the wrong order. put them in the right order by writing the number from 1-6 in the cage. Number 1 has been done for you.
*(Time: 5 minutes)*

(a) But the strange thing is that nobody seems to live there. Only the gardener and the house keeper visit and leave. Otherwise the house is empty. No one that I know can solve this mystery. ☐

(b) It is a large two storey house with a large garden. ☐

(c) I don 't like to stand ther and peep in but even a quick look tells you that everything is perfectly kept. ☐

(d) Along the street where I live is a house that is something of a mystery. ☐

(e) This is surrounded by a high wall and the only spot where you can see inside is the gate. ☐

(f) The garden is neat and tidy and the house itself is freshly painted. ☐

(2) Read the following passage and the statements given below. put (✓) in the box against the correct statements and a cross ( X) in the box against the incorrect ones.


why do birds migrate? Not all birds migrate, but a lot of them do, two of the best know British migrants being the swallow and the horse martin, which fly south in the Autumn to spend the winter in some parts of Africa.

The reason they do this is because of the need for food, of which there is a great shortage in Nothern Europe during the winter - these birds eat mainly insects which die or hibernate in winter.

So why doesn't the swallow stay in Africa all year round. The reason is that it breeds in Europe than in Africa. This is also the case when fish salmpn travel each year to places where they feed.

| STATEMENTS | TRUE | FALSE |
|---|---|---|
| 1. Migrant birds spend their Autumn in Africa. | ☐ | ☐ |
| 2. The migrant birds find a lot of insects to eat in winter in Africa. | ☐ | ☐ |
| 3. In winter there is a shortage for insects in Nothern in Europe. | ☐ | ☐ |
| 4. All British birds fly south to Africa in Autumn. | ☐ | ☐ |
| 5. Migrant birds come back to Europe to lay eggs and hatch their young ones. | ☐ | ☐ |

(3) This bar graph shows the number of students following different courses of study in a University. Study the graph care fully and an swer the following questions by writing YES or NO in the box provided.
*(Time : 10 minutes)*




1. Are there more Engineering students than the number of Medical students? ................
2. Does the Computer Science faculty have the least number of students? ................
3. Does medical faculty have the second largest number of students? ................
4. Does the number of Medical students and the engineering students put together exceed the number of students in the Physical Science and Management course added together? ................
5. Are there more Management students than the computer science students? ................

4. Here are fifteen different jobs.They are written 5 cages. Some of them are professional jobs, some are skilled jobs and the others are manual work. Write how many of these groups belong to each of the above said categories (divisions) in the boxes provided.

| | | |
|---|---|---|
| A professor.<br>A scientist.<br>A lawyer. | A wood cutter.<br>A stone breaker.<br>A porter. | A doctor.<br>An engineer.<br>An archetect. |
| A carpenter.<br>A potter.<br>A basket weaver. | A dress maker.<br>A painter.<br>A hair dresser. | |

1. Skilled jobs ..........................................
2. Manual jobs ..........................................
3. Professional jobs ..........................................

5. After completing your secondary education you have joined an engineering firm as an apprentice. You learn the trade there in the morings. You want to join the Government Technical college in your district to follow an evening course or a week - end course that would help you in your apprentice ship. Fill in the following application form for admission in the technical college.
*(Time : 10 minutes)*

APPLICATION FOR ADMISSION
( To be filled completely in block Capital letters)


1. Name in full:- ................................
2. Sex:- ................................
3. Date of Birth:- Year / Month / Day ........ ........
4. Age as on 01/01/2002:- Years......... Month........... Days....
5. Private Address:- ................................
6. School Attended:- ................................
7. Results at the G.C.E.(O/L) Examination................................
8. Pressent occupation:- ................................
   Place of work:- ................................
9. Coure selected:- ................................
10. Evening coure or week end course:-................................

Date:-.......... ........................
(Signature)

PN. Shutharson
(Vavuniya Parameswara Vid.)


## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 2002

# கணிதம்



### பகுதி II

01. (a) ∈={சுற்றுலாவுக்குச் சென்ற மாணவர்கள்}
x={கண்டிக்குச் சென்ற மாணவர்கள}
y={பொலநறுவைக்குச் சென்ற மாணவர்கள்}
Z={சிகிரியாவுக்குச் சென்ற மாணவர்கள்}





1) கண்டிக்குச் சென்ற மாணவர்கள் எத்தனை பேர்?
2) கண்டிக்குச் சென்றவர்களில் எத்தனை பேர் சிகிரியாவிற்குச் சென்றனர்?
3) $zn(y'nx)=0$ என்பதை வசனத்தில் எழுதிக்காட்டுக?
4) நிழற்றிய பிரதேசத்தை குறிக்கும் மாணவர்கள் யாவர்?
5) வென் படத்திலிருந்து நீர் பெறக் கூடிய முடிவை எழுதுக?

(b) 1) காரணி காண்க $16x^2-9$
2) தீர்க்குக $2x^2-5x-24=x^2$
3) தீர்க்குக $3x+2y=(-8)$
$2x+4y=(-8)$

(c) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது
1) $\log x^2 = \log (x^3/8) + \log (5x/4)$ என்பதைச் சுருக்குக
2) $x=10^{0.6432}$, $y=10^{2.1230}$ எனின்
1) xy 2) $\text{Log } 10^{xy}$ என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க?
3) $\dfrac{0.1602 \times \sqrt{0.3802}}{(4.6420)^2}$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி காண்க

(d) 1) உருவில்
PQ=6cm QS=10cm PR=15cm
எனின் RSன் நிளத்தைக் காண்க.




2) செங்கோண முக்கோணி ஒன்றில் $\cos 30^\circ$, $\sin 60^\circ$ ஆகியவற்றின் பெறுமானங்களைக் காணும் முறையை விளக்குக.

5ஆம் பக்கம் பார்க்க

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பெருமைக்கும் ஏழைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்*

*-திருக்குறள்-*

# நமது நோக்கு

## அமைதிக்கு எதிரானவர்கள்!

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதைப் போலவே- சிங்கள இனவாதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவினது செயல்கள் இருக்கின்றன.

கடந்த வெள்ளியன்று திருகோணமலையில் நடைபெற்ற தமிழர் படுகொலைகளின் பின்னணியில் - ஜே.வி.பியினதும் அதன் நேச சக்திகளினதும் ஆதரவு இருப்பதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஏற்கனவே - திருகோணமலையில் கடந்த காலங்களில் நடைபெற்ற பல வன்செயல்களோடும் ஜே.வி.பி.யின் தொடர்பு துலாம்பாரமாக வெளியே தெரிந்தே இருந்தது.

இவ்வாறான சூழலில் - சமாதானத்திற்கான முன்னகர்வுகளைப் பாதிக்கக்கூடிய வகையில், தமிழ் மக்களின் மீது திட்டமிட்ட தாக்குதல்களைத் தொடர்வதன் மூலம் - தனது சதி வலையை ஜே.வி.பி.தயாராக்கி வருவதாகவே தெரிகின்றது.

தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்டே ஆக வேண்டிய உரிமைகள்- சிங்கள இனத்தை நசுக்கிவிடும் என்றவாறான பிரச்சாரத்தை சிங்கள மக்கள் முன்னெடுத்து அமைதியைக் குழப்புவதற்கு ஜே.வி.பி. தன்னாலியன்ற அனைத்தையும் செய்யும் என்றே அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

குழம்பிய குட்டையில் மீன் பிடித்து விடலாம் என்ற தனது கனவை நனவாக்குவதற்காக எதையும் செய்யலாம் என்ற நிலைக்கு ஜே.வி.பி.யும் அதன் ஆதரவு சக்திகளும் காத்திருப்பதையே திருமலைச் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஜே.வி.பி.யின் ஊடுருவலானது - தனியே சிங்கள மக்களிடையே மட்டுமல்லாது, படையினருக்குள் நிகழ்ந்திருப்பதாகவே தெரிகின்றது.

தமிழர் விரோதம் என்ற கொடியின் கீழ் - அமைதியைச் சீரழிக்க முயல்வதானது - தமக்கான சவக்குழியைத் தாமே அமைத்துக் கொள்வதற்கு ஒப்பானது என்பதை - அமைதியைக் குழப்ப முயல்பவர்கள் புரிந்து கொள்ளாமலிருப்பதுதான் வியப்பானது.

இதையேதான் - திருமலையில் நடந்த கலந்துரையாடலொன்றில், விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் காட்டமாகக் கண்டித்துப் பேசிய பௌத்த பிக்குகளுக்கு- அமைச்சர் ஜோன் அமரதுங்க எடுத்துக் கூறியிருக்கிறார்.

தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானத்தைப் பெறத் தவறினால் எல்லோருமே அழிக்கப்படுவோம். அத்துடன் நாட்டுக்கு எதிர்காலமென்றும் இருக்காது என அவர் கூறியிருப்பதை - சரியாகப் புரிந்து கொள்ளும் எவரும் இவ்வாறான இன விரோதத்தை தூண்டவும், அமைதியைக் குழப்பவும் முயற்சி செய்ய மாட்டார்கள்.

இன்றைய சமாதானத்துக்கான பாதை இலகுவாக உருவாக்கப்பட்ட ஒன்றல்ல என்பதையும்

போரினால் சிங்கள இனமும் நாடும் சந்தித்த அழிவுகளோடு இன்றைய சூழலை ஒப்பிடும் போது,தற்போது நிலவும் மகிழ்ச்சியும் நிம்மதியும் சிதைக்கப்படக்கூடாததன் அவசியத்தையும் - உணர்நது கொள்ளும் எந்தப் பொதுமகனும் - ஜே.வி.பி. யின் அரசியல் உள்நோக்கத்தை தெளிவாகவே புரிந்து கொள்வார்.

மீண்டும் வலுப்பெற முயற்சிக்கும் - சிங்களப் பேரினவாதச் சிந்தனைகளுக்கும், தமிழர் விரோதச் சக்திகளுக்கும் - நியாய பூர்வமாகச் சிந்திக்கக்கூடிய சிங்கள மக்கள் தரப்போகும் எதிர்ப்பையும், அதனூடான செயற்பாடுகளையும் பொறுத்தே சமாதானத்தின் விளைவுகள் நிரந்தரமாகும் என்பது கண்கூடானது.

# பொ. ஐ. மு. அரசின் ஆயுதக் கொள்வனவு; விசாரணைக்குழு செயலிழந்த நிலையில்!

## கட்டடங்கள், வாகனங்கள் கூட இல்லையாம்

(கொழும்பு நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் முப்படைகளுக்கும் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள், தளபாடங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு செயலிழந்து போயுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஆயுதக்கொள்வனவு மோசடிகள் தொடர்பாக விசாரிக்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இக்குழு- இராணுவத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் குண்டுகள் மற்றும் தளபாடங்கள், கடற்படைக்கெனக கொள்வனவு செய்யப்பட்ட போர்க்கப்பல்கள், பீரங்கிப் படகுகள் மற்றும் விமானப்படைக்காக வாங்கப்பட்ட எம்.ஐ 17, எம்.ஐ 24 ஹெலிகள் உட்பட சுமார் நூறு கொள்வனவு நடவடிக்கைகள் குறித்து விசாரிக்கவிருந்தது.

இதில் எட்டு முக்கியமான ஆயுதக்கொள்வனவுகள் குறித்த விசாரணைகளே மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த ஆணைக்குழு செயலிழக்கும் நிலையை அடைந்துள்ளது.

திலக் மாரப்பன தலைமையிலான இந்த ஆணைக்குழுவிற்கு அரசாங்கம் உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்காததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதெனக் கூறப்படுகின்றது.

ஆணைக்குழுவுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாதுள்ளதுடன், இயங்குவதற்கான கட்டடம் கூட வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

# புங்குடுதீவில் பாஸ் நடைமுறை கடற்படையினரால் நீக்கப்பட்டது

(புளியங்கூடல்)

புங்குடுதீவில் கடற்படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாஸ்நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் சர்வதேச கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது புங்குடுதீவில் பாஸ் நடைமுறையை நீக்குவதற்கு கடற்படையினர் இணங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்தே கடந்த சில நாட்களாக கடற்படையினர் புங்குடுதீவுக்குள் பாஸ் வழங்கும் பணியை இடைநிறுத்தியுள்ளனர்.

தீவகத்தின் ஏனைய பகுதிகளிலும் புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் பாஸ் நடைமுறை நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட வணிகர்கள்

# தமக்கான இழப்பீடுகள் வழங்கப்படும் வரை இலவச நிவாரணத்தை தருமாறு கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரிப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் பெரும் இழப்புக்களை எதிர்கொண்டுள்ள வர்த்தகர்களுக்கு இழப்பீடு கிடைக்கும்வரை இடம்பெயர்ந்தோருக்கு இலவசமாக வழங்கப்படும் நிவாரணஉதவியை தொடர்ந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி வணிகர் மன்றத்தினர்- புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யுத்தஅனர்த்தங்களால் உடைமைகளையும், சுய தொழில்களையும், குடியிருப்புக்களையும் இழந்து அன்றாட வாழ்க்கைக்கே சிரமப்படும்வேளையில் சாவகச்சேரி பிரதேசத்தில் ரூ.1500 மேற்பட்ட வருமானம் உடைய குடும்பங்களுக்கு இழப்பீடு தொடர்பான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்தவிண்ணப்பத்தை பூர்த்திசெய்து கிராமசேவையாளரிடம் ஒப்படைத்தபோது இடப்பெயர்வு காரணமாக வழங்கப்பட்ட நிவாரண முத்திரைகளை ஒப்படைத்து விட்டு பங்கீட்டு அட்டையை “உ” அட்டையாக மாற்றுமாறு கிராம சேவையாளரால் கூறப்படுகிறது.

இதனால் வர்த்தகர்கள் இழப்பீடு வழங்கப்படும் வரையாவது நிவாரண உதவியை பெற ஏற்பாடு செய்யுமாறு புனர்வாழ்வு அமைச்சரிடம் கோரியுள்ளனர். அது மட்டுமன்றி இந்த் கடிதத்தின் பிரதிகள் பிரதமர், இந்துசமய கலாச்சார அமைச்சர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், தென்மராட்சி பிரதேசசெயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.(37)

# புலிகள் - அதிரடிப்படை சந்திப்பு கண்காணிப்புக் குழு தீவிர முயற்சி

(கொழும்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளுக்கும், விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்றுக்கான ஒழுங்குகளை சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு செய்து வருகிறது.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவங்கள் போல இனிமேலும் தொடராதிருப்பதற்கான முன்னோடி ஏற்பாடாக இப்பேச்சுக்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டு-அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த புலிகளின் முக்கிய பிரமுகர்களுக்கும் அதிரடிப்படையதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள இச்சந்திப்பிற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

புலிகளின் மட்டு-அம்பாறைப் பிராந்திய சிறப்புத்தளபதி கேணல் கருணாவுடன் தொடர்பு கொண்டு திகதி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சந்திப்புக்கான நாள் அறிவிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

# எத்தனையோ சம்பவங்கள் நடந்தும் புலிகள் பொறுமையை இழக்கவில்லை!

## கூட்டமைப்பு எம்.பி மாவை.சேனாதிராசா பாராட்டு

(வலி. வடக்கு)

“சமாதானம் என்று ஆசையுடன் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள் - அண்மைய சில சம்பவங்களால் அவலப்படுகிறார்கள். ஆதங்கப்படுகிறார்கள். இந்நிலையில் மக்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பொறுமையைக் கடைப்பிடித்து எதிர்காலத்தைத் தீர்மானிக்க திடசங்கற்பம் பூண வேண்டும்.

இப்படிக் கூறுகின்றார் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

கட்டுவனைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்துரை யாழ் மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றமையடுத்து இணுவில் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து பாராட்டுரை வழங்கியபோதே அவர் இப்படிக்கூறினார்.

யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த சில நாட்களாக இடம் பெற்ற மனவருத்ததிற்குரிய சம்பவங்கள் குறித்து எல்லோரும் அறிவீர்கள். மீண்டும் ஒரு முறை எமது போராட்டத்தில் ஆயுதம் ஏந்த வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. போராட்டம் என்பது எத்தகையது என்பதை கடந்த காலங்களில் நாம் கண்டிக்கின்றோம். ஆனால் அதை நினைத்து நாம் பொறுததுக் கொண்டிருக்கவும் முடியாது.

சமாதானத்திற்கு எதிராக பேரினவாத சக்திகள் மீண்டும் தமது கைவரிசையை காட்ட முனைகின்றன. அரசுக்குள்ளும், எதிர்க்கட்சியிலும், படைகளிலும் உள்ள இச்சக்திகள் சமாதானத்திற்கான பாதையில் இடர்களை ஏற்படுத்துகின்றன. பழையபடி வேதாளம் மரத்தில் ஏறும நிலை ஏற்பட்டுவடுமோ என எண்ணுகின்றோம். மீண்டும் யுத்தம் வெடிக்குமோ என அஞ்சவேண்டியுள்ளது. ஆனால் அரசாங்கமும் புலிகள் தரப்பும் சர்வதேசமும் சமாதானத்தில் மிக உறுதியாக உள்ளன. எத்தனையோ சம்பவங்கள் நடந்தும் புலிகள் தமது பொறுமையை, ஆளுமையை இழந்து விடவில்லை. இனவாத சக்திகள், அமைதிக்கு எதிரான சக்திகள், இனப்பிரச்சினை தீரக்கூடாது என எண்ணும் சக்திகள் தலை தூக்கினாலும் மக்கள் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். நாம் செல்லும் பாதை கடினமானது. அதை கட்டுப்படாக இருந்து எதிர்காலத்தை சரிவர திட்டமிடுவோம்'' என்றார்.

வலி.வடக்கு, தென்மராட்சி பகுதிகள் குறித்து அரசு கொடுத்த உத்தரவாதங்கள் எதுவும் நிறைவேற்றப்படாமல் இருப்பதாகவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், 'நமது ஈழநாடு' நிர்வாகட் பணிப்பாளருமாகிய எஸ் சிவமகாராசா, இந்து கலாச்சார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் பாராட்டுரை வழங்கினர். (105)

# எமது மண்ணின் அரசியல், பொருளாதார, புவியியல் அடிப்படையில் புதிய கல்வித்திட்டம் வேண்டும்!

**உதவி ஆசிரியராக 13 வருடங்களும், அதிபராக 24 வருடங்களும், ஆரம்பக்கல்வி ஆலோசகராக சாவகச்சேரி கல்விக் கோட்டத்தில், வலயத்தில், யாழ்.மாவட்டத்தில் 10 வருடங்களும் கடமையாற்றியவர். 1999ஆம் ஆண்டு மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகத்தினால் மணிவிழா கண்டவருமான முதலாந்தர அதிபர் செ.க.துரைரத்தினம் தொடர்ந்தும் கல்வியியலில் ஈடுபாடு காட்டுகிறார் என ஆசிரியர், அதிபர்களாலும் புத்திஜீவிகளாலும் பாராட்டப்படுபவர். அவருடனான நேர்காணல் வருமாறு.**

❖ பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கையில் ஆற்றலுள்ளவர்கள். ஆற்றலை வெளிக்கொணர்வது ஆசானின் கடமை என்கிறார்கள். உங்கள் கருத்தென்ன? எத்தனையோ தொழில்களிருக்க நீங்கள் ஆசிரியத் தொழிலை ஏற்ற காரணமென்ன?

*பதில்:*-இது ஒரு உளவியல் ரீதியான கேள்வி. குழந்தை பிறக்கும்போது இயல்பான ஆற்றல் கொண்டே பிறக்கிறது. அவர்களது ஆற்றலை உளவியல் அறிவு கொண்ட பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் தான் வெளிக்கொணர முடியும். பெற்றோரிடம் நாம் இதனை முழுமையாக எதிர்பார்க்க முடியாது. எனவே ஆசிரியர்கள்தான் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும்.

## விருந்தினர் பக்கம்

உளவியல் அறிவு ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கல்லூரிகள் மூலமும் டிப்ளோமா பயிற்சி மூலமும், உளவியல் நூல்களைப் படிப்பதன் மூலமும் பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்பிருக்கிறது.

பிள்ளையிடம் ஆண்டவனால் வழங்கப்பட்ட ஆற்றல் உண்டு. குறைபாடுள்ள பிள்ளைகளே தம் திறமைகளை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் பல உண்டு. சாதாரண பிள்ளைகளை நோக்குவோமானால் பிள்ளைகளிடம் உள்ள இயல்பாற்றலை நாம் இனங்காண வேண்டும். இது ஓர் மிகவும் கடினமான முயற்சி. சிந்தித்து ஆசிரியர்கள் தாம் பெற்ற அறிவோடு ஆராய்ச்சி செய்யவேண்டிய பொறுப்பு உடையவர்கள். மாணவரது ஆற்றலைக் கண்டுபிடித்து விட்டால் சுலபமாக வழிகாட்டிவிட முடியும். அவர்களும் துலங்குவது நிச்சயமாகிவிடும். ஆசிரியர் வேலை எளிதாகிவிடும்.


மாணவரது ஆற்றலைக் கண்டுபிடியாத நிலையில் வகுப்புக்களில் மெல்லக் கற்போர், குழப்படிகாரர், கவனயீனக்காரர் அதிகமாவர். ஆசிரியரும் மாணவர் மீது வெறுப்படைவர். இடைவிலகல் தானாக வளர்ச்சி பெறும். பாடசாலையில் மாணவன் ஆற்றல் வெளிக்கொணரப்படாமல் வழிகாட்டப்படாத மாணவன் சிறு வயதில் வெளியே வந்து தொழிற்சாலைகளில் தம் திறமைகளைக் காட்டுவதை நாம் அதிகமாக காண்கிறோம்.

❖ கற்பித்த இடங்களில் மாணவர் மனப்பாங்கு, கல்வியின் மகத்துவம் பற்றிய பெற்றோர் நிலைமை எப்படியிருந்தது?

*பதில்:*-1964ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்திலுள்ள தொளஸ் பாகை கெல்லி அ.த.க. பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினேன். அப்போது அங்கு படித்த மாணவர்கள் மிகுந்த குருபக்தி கொண்டவர்கள். ஆரம்ப வகுப்புக்களைக் கவனமாகப் படிப்பார்கள். 5ஆம் வகுப்பு முடிந்ததும் பாடசாலைக்கு வரமாட்டார்கள். பெற்றோரைத் தேடிப்பிடித்து பிள்ளைகள் 6ஆம் வகுப்பிற்கு வரவில்லையே என்று கேட்டால் அந்தப் பெற்றோர் எனக்குக் கூறியது இப்போதும் காதில் ஒலிக்கிறது. "அவன் படிச்சு முடிச்சுட்டான் சார்". அவர்களது தேவை அவ்வளவு தான் என்பதே நாங்கள் எங்கள் ஆய்வின் மூலம் தெரிந்து கொண்டோம். தேயிலைத் தோட்ட வேலை, குடும்ப அங்கத்தவர்கள் தொகை, அவர்களது குடும்பநிலை அவ்வாறமைந்திருந்தது. அத்துடன் வயதுக்கேற்ற புறக் கவர்ச்சிகளும் மாணவரைத் திசை திருப்புவதை அவதானித்தோம். பெற்றோருக்கான வகுப்புக்கள், மாணவருக்கான அறிவுரை வகுப்புக்களை ஆசிரியர்கள் மேற்கொண்டு பார்த்தோம். அப்போது எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை விரும்பிப் படிக்கிற மாணவர்களை விட பெற்றோரின் வற்புறுத்தலுக்காகப் படிக்கிற மாணவர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

❖ தற்போதைய சீர்திருத்தம் பாடத்திட்டங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்? பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதன் காரணம் யாதாயிருக்கும்?

*பதில்:*-ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டைப் பொறுப்பேற்கும் பொழுது தனது அரசியல் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப பாடவிதானத்தை எந்தநாட்டு முறையையா



செ.க.துரைரத்தினம்
இளைப்பாறிய அதிபர்

வது பின்பற்றிக் கொண்டு வந்து பாடங்களாக வகுத்து பாடத்திட்டமாக்கி பாடசாலைகளுக்கு அனுப்புவதோடு கல்வி அமைச்சின் வேலை நின்றுவிட, பாடவிதான அபிவிருத்திச் சபை, தேசியக் கல்வி நிறுவனம் போன்றன பாடநூல்களை வெளியிட்டுக் கொடுக்க, கல்வித் திணைக்களம் பரிபாலனம் செய்து வருவது வழமை.

அரசின் கொள்கையடிப்படையிலல்லாது - எமது நாட்டு அரசியல், பொருளாதார, புவியியல் ரீதியாக ஆராயப்பட்டு அபிவிருத்தியடிப்படையில் கல்வித் திட்டம் வகுக்கப்பட வேண்டும். ஒவ்வொருதுறைக் கல்விமான்கள் வள ஆய்வாளர்கள் ஒன்று சேர்ந்த சபை பிரதேச வளங்களுக்கேற்ப கல்வித் திட்டத்தை ஆக்கினால் அது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் கல்வித் திட்டமாக அமையும்.

ஆரம்பக் கல்வி, ஏனைய நாட்டு அறிவுகளைப் பயன்படுத்தி மாணவரை ஈர்க்கும் கல்வித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். விளையாட்டு மூலக் கல்வி, பல்துறைக் கல்வி போன்றன ஆய்வுவழியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இது சிறப்பான பலனையும் கொடுத்திருக்கிறது.

இடைநிலைக் கல்வியில் - 6ஆம், 8ஆம் வகுப்புக்களில் தரம் கண்டு தரப்படுத்தல் மூலம் மாணவர்களுக்கேற்ற, இயல்பாற்றலுக்கேற்ற தொழிற்கல்வி அளிக்கப்படவேண்டும். இதைவிடுத்து வகுப்புக்களை ஒரே தண்டவாளத்தில் கொண்டு சென்று இடைவிலகலும், மேற்கல்விக்கு முன் தேக்கமும் அதிகரித்து வருவதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். பெறுபேற்று வீழ்ச்சியும் இதனாலேயே அதிகரிக்கிறது.

❖ பெறுபேற்று வீழ்ச்சிக்குரிய காரணம்?

*பதில்:*-பெறுபேற்று வீழ்ச்சியா...? இது ஒரு வீழ்ச்சியென்று நான் கருத வில்லை. தவறான வழியில் கல்வித் திட்டத்தை எடுத்துச்சென்று தனியாள் வேறுபாடுகளைப் புரியாது ஒருவிதமான பரீட்சையின் முன் யாவரையும் நாகரிகமாக நிறுத்தி அவ்வவ்துறையில் ஆற்றல் உள்ளவர்கள் சித்தியடைய மற்றவர்களைக் குறைவாக மதிக்கின்ற ஒரு வழி. இது பரீட்சை மையக்கல்வி தரும் பரிசு.

பரீட்சை ஒன்று இல்லாமல் தெரிவு செய்வது கடினம் என்பது ஒரு உண்மைதான். ஆரம்பக்கல்வியில் எண், எழுத்து, வாசிப்புக் கொடுக்கப்பட்ட பின் - தரம் 3 அல்லது தரம் 4 இலேயே மாணவர்களுக்கு தொழிற்கல்விசார் அறிவைக் கொடுத்தல்கூடத் தவறாகாது. இன்றைய நவீன உலகத்திற்கு யாவரும் தேவை. அது ஏன் கல்வியின்பாற்பட்டதாக இருக்கக்கூடாது. பொறியியலாளர், வைத்தியர் உயர்ந்த தொழில்கள் என்றும், ஏனையவை தாழ்ந்தவை என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. தொழில் மகத்துவம் பேணப்படுவதில்லை. அதற்கு கல்வி முறையிலுள்ள குறைபாடே காரணம்.

❖ மாணவரிடையே ஒழுக்கமின்மை, பெரியோரை மதிக்காமை பெருகி வருகிறதே. இதற்கு பாடசாலை, சமூக நலன் நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பணி?

*பதில்:*-வீடு, பாடசாலைச்சமூகம் ஒருவனுடைய வளர்ச்சிக்கு [illegible] காட்டியாக அமைகின்றன. அதன[illegible] படையில் பழக்கவழக்கம் பண்பா[illegible] அமைந்து விடுகிறது. வழிகாட்டிகள், வழிகாட்டிகளாகவே அமைய வேண்டும். உதாரண புருஷர்களாக வாழ வேண்டும் என்பது முக்கியம். மாணவன் தனது வயதிற்கேற்ற சகபாடிகளோடு சேர்ந்து தவறைச் செய்யும் போது தவறு என்பதாவது விளங்க வேண்டும்.

ஒரு ஆசிரியர் முன்மாதிரியாக நடந்து மக்கள் மத்தியில் பெயர், புகழ் பெறும்போது - மாணவன், தானும் அப்படி வர முயற்சிப்பான். ஒவ்வொரு ஆசிரியரையும்போல் பாவனைசெய்ய அவனிடம் அபார சக்தியுண்டு. ஆசிரியன் மாணவன் மேல் உண்மையான கோபம் கொள்ளக்கூடாது. அவனை எவ்வாறு நல்லவனாக்கலாம் என்ற சிந்தனையின் பின் கோபமானவர்போல் நடிக்க வேண்டும்; அன்பாலும் வெல்ல வேண்டும்; புகழ்ந்தும் மருந்த[illegible] வேண்டும்; இதை என் 24 வ[illegible] அதிபர் சேவையில் சாதித்தேன் என்று திருப்திப்படுகிறேன்.

நலநோன்பு நிறுவனங்கள் கூட இதேவழியில் உண்மையானவையாக, சரியான வழியில் முன்னெடுக்கப்பட்டு அறநெறிகளை போதிக்கின்றவைகளாக இருத்தல் வேண்டும். பிழையானதைச் செய்யும்போது கோபப்படுபவர்கள் - மற்றவர்களைத் திருத்துவதற்காகக் கோபப்படுபவராகவும் இருக்க வேண்டும்.

திருத்துபவர் ஆளுமையுள்ளவராக, நேர்மையுள்ளவராக இருந்தால் திருந்துபவர் பணிந்துபோவார் என்பது உண்மை. என்னுடைய 13 வருடகால உதவி ஆசிரியர் சேவையிலும் 24 வருட அதிபர் சேவையிலும் 1985 முதல் 1995 வரையான காலப்பகுதியில் ஆரம்பக்கல்வி ஆலோசகராகக் கடமையாற்றிய அனுபவத்திலிருந்தும் எடுத்துச் சொல்லக்கூடியவை - ஆசிரியர் பணியை உயர்வாக மதித்து அர்ப்பணிப்போடு செய்யும்போது, பண[illegible] சிறப்பானதும் உயர்வானதுமாக அமையும். என்னால் மாணவர்கள் உயர்ந்தார்கள் என்றால்தான் என் சேவை பலன் தந்தது என்று அர்த்தப்படவேண்டும். பிள்ளைக்கு விளங்கவில்லையென்றால் நான்தான் மாற்று வழிகளைத் தேடி விளங்கவைக்க வேண்டும். ஆசிரியர்களின் பணி மாணவர்களுக்கானதே. மாணவர்களை நல்வழிப்படுத்துவதே. இதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் இருத்த வேண்டும். ☆

**நேர்காணல்: சிறிநடா**

### துவிச்சக்கர வண்டிகளில்

# அருகருகாகப் பயணம் செய்வோரால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு!

(உரும்பிராய்)

துவிச்சக்கரவண்டிகளில் பக்கம்-பக்கமாகப் பயணம் செய்வதால் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான வீதிகளில் சனநெருக்கடியும் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கையும் அண்மைக் காலமாக அதிகரித்தே காணப்படுகின்றது.

இந்நிலையில் அடிக்கடி ஏற்படும் வீதி விபத்துக்களால், தேவையற்ற உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும், தனியார் கல்வி நிறுவனங்களிற்கு செல்லும் மாணவர்களும், துவிச்சக்கர வண்டிகளில் அருகருகாகப் பயணிக்கும் நிலையே விபத்துக்களுக்குக் காரணமாகவுள்ளது எனவும், மோட்டார் வாகனங்களைச் சோதனையிடும் பொலிசார் இச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் விசனமடைந்துள்ளனர்.(84)

# கசிப்பு வழக்கில் பெண்ணுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்ற கசிப்பு வழக்கொன்றில் பெண்ணொருவருக்கு 10 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்த நீதிவான் உத்திரவிட்டுள்ளார்.

கசிப்பு உற்பத்தி செய்யும் 120 லீற்றர் கோடா வைத்திருந்தமைக்கு எதிராக நடைபெற்ற வழக்கில் விஜேயபாஸ்கர் சிவகாமி என்பவரை 10 ஆயிரம் ரூபா குற்றப்பணமும் 2000 ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்கினராஜா உத்திரவிட்டுள்ளார் என தெரியவருகின்றது. (லி)

# வடமராட்சி கிழக்கில் பச்சைமரங்கள் வெட்டப்படும் செயற்பாடுகள் அதிகரிப்பு!

(வரமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் விறகிற்காக பச்சைமரங்கள் வெட்டி எடுத்துச்செல்லும் செயல்கள் அதிகரித்துள்ளன.

இயற்கை அழிவுகளைக் கட்டுப்படுத்திச் சூழல் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வகையில் நிற்கின்ற சவுக்கம் மரங்களை - விறகுக்காக வெட்டி, பேக்கரிகளிற்கும் மற்றும் தேனீர்ச்சாலைகளுக்கும் விற்கின்ற செயற்பாடுகள் நாளாந்தம் இடம்பெற்றுவருகின்றது.

இவ்வாறு வடமராட்சிக்கு வெளியே பச்சை மரங்களை வெட்டி விற்கும் நபர்களால் சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் - மண்ணரிப்பு ஏற்படும் அபாயமும் உள்ளதால் இதனோடு தொடர்புடைய அமைப்புக்கள் இதனைத் தடுக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் சார்பில் கேட்கப்படுகின்றது. (17)

## வேப்பமரத்திலிருந்து வடியும் கள்!

(இளவாலை)

இளவாலை, உயரப்புலம் பகுதியில் உள்ள வீடொன்றில் வேப்ப மரத்திலிருந்து கள் வடிந்துகொண்டிருக்கிறது.

ப.குமார் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் நிகழ்கிறது. பல நோய்களை நீக்கும் இவ் இயற்கை மருந்து போத்தல் 50 ரூபா படி விற்பனை செய்யப்படுகிறது.

# பேராசிரியர் மௌனகுருவுடனான சந்திப்பு பல்கலைக்கழகத்தில்!

"பாரம்பரிய அரங்கின் அடையாளம்",, "சமகால நிலைமை", "எதிர்காலம்", "எடுக்கப்பட்ட முயற்சிகள்" ஆகிய தலைப்புக்களில் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுருவுடனான சந்திப்பு அரங்கு இன்று புதன் மாலை 4 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

(63)

# கட்டாக்காலி நாய்களால் வரணிப் பகுதி மக்களுக்கு தொல்லை

(வரணி)

கட்டாக்காலி நாய்களால் வரணிப் பகுதியில் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இராணுவக் காவலரண்களை அண்டிய பகுதிகளில் நாய்கள் பெருந்தொகையாகக் காணப்படுவதாகவும் அவ்வீதி வழியாக வரும் பயணிகளை அவை துரத்திக் கடிப்பதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் வீதிகளில் நடமாடுவதற்கு அச்சப்படுகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கை கடந்த சில காலங்களாக மேற்கொள்ளப்படாமல் இருப்பதே இவ்வாறு வீதிகளில் நாய்களின் அதிகரித்திருப்பதற்கான காரணம் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சமாதானச் சூழலை தகர்க்க முயற்சித்த அதிரடிப்படையின் துப்பாக்கிச் சன்னங்கள்



இது ஒரு துன்பகரமான நிகழ்வாகும். அத்துடன் மோசமான துக்ககர உயிரிழப்பாகும். மக்கள் தம் அன்பிற்குரியவர்களை இழந்து வேதனையுறுகின்றனர். நம்பிக்கையும் சமாதான முன்னெடுப்புகளும், அச்சமும் நிச்சயமற்ற தன்மையுமாக மாறிவிட்டன. இது உண்மையாகவே ஒரு துன்பியல் நிகழ்வாகும். இதில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினர் மட்டுமன்றி சிறீலங்காவிலுள்ள அனைத்து மக்களுமே இந்த நாட்டில் நிலையான சமாதானத்தை நிச்சயப்படுத்துவதில் பொறுப்புடையவர்கள் என்பதை இது வலியுறுத்துகின்றது- காஞ்சிரங்குடா கொலைகள் பற்றி கண்காணிப்புகுழு தலைவர் ஜெனரல் றொன்ட் புரூவ் ஹேறாவ்டே.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட தினம் ஓர் இன்பமான தினமாகும். நொருங்கி விடக்கூடிய சமாதான முயற்சிகளை அச்சுறுத்திக் கொண்டிருந்த- சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் சாகும் வரையான உண்ணாநோன்பு கடந்த புதன் கிழமை திருப்திகரமான முறையில் நிறுத்தப்பட்டதும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

இருந்தாலும் எதிர்பாராத முறையில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக் கிச்சூடு சமாதான முயற்சி பற்றிய அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாலையில் அதிரடிப்படை முகாமைத் தாண்டிச்சென்ற ட்ராக்டர் வாகனம் அதிரடிப்படையினரின் உத்தரவுக்கு பணியாமல் போனபடியால், அதே வாகனம் மணல் ஏற்றிக் கொண்டு திரும்பி வரும் பொழுது அவர்களுக்குப் பாடம் படிப்பிப்பதற்காக சாதாரண உடையில் சில அதிரடிப்படையினர் காத்து நின்றனர்.

10.15 மணியளவில் திரும்பி வந்த வாகனத்தின் சாரதியிடம் லைசென்ஸ் மற்றும் வாகனப் பதிவுப் பத்திரங்களைக் கேட்டு , அவை தவறானவை எனத் தர்க்கப்பட்டு, அதிரடிப்படையினர் தாக்கியுள்ளனர்.

வாகனத்திலிருந்த மற்றும் இருவரும் இறங்கி வந்து தாங்கள் புலிப்படையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காட்டியுள்ளனர். அத்துடன் ஒருவர் பொத்துவில் அரசியல் பிரிவுத் தலைவர் எனவும் கூறியுள்ளார். உடனே சாதாரண உடையில் நின்ற அதிரடிப்படையினர் அவர்கள் இருவரையும் மிக மோசமாகத் தாக்கினர். றைபிள் அடிச்சட்டத்தாலும் மண்வெட்டிப் பிடிகளாலும் மண்ணில் விழுத்தி மூவரையும் தாக்கினர். பொது மக்களை ஏற்றிக் கொண்டு அவ்வீதியால் வந்த பேருந்துதான் அவர்களைக் காப்பாற்றியது. பேருந்தைக் கண்டதும் அதிரடிப்படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். தாக்கப்பட்ட மூவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. இதே அதிரடிப்படையினர்தான் சென்ற வருடம் விநாயகபுரம் விவசாயிகளை நெல் அறுவடை செய்ய விடாது தடுத்து அவர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்தியவர்கள் ஆவர்.

இதனால் இப் பகுதி மக்களின் உள்ளங்கள் குமுறிக் கொண்டிருந்தன. இந்தத் தாக்குதலும் அறுவடைத்தடையும் சேர்ந்து ஆர்ப்பாட்டங்களை மேலும் அதிகரிக்கச் செய்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களை அதிரடிப்படை முகாமினுள் ஊடுருவிச் செல்வதற்கான ஒரு காட்டமான நிகழ்வாக அதிரடிப்படையினர் சந்தேகப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமை மூடும்படி கோஷமிட்டனர். முட்கம்பி வேலிகளையும், பங்கர்களையும் ஆத்திரம் கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தகர்த்தனர்.

6.15 மணியளவில் இருட்டத் தொடங்கியபோது அதிரடிப்படையினர் இறப்பர் குண்டுகளினாலும் கண்ணீர் புகைக்குண்டுகளினாலும் தாக்கத் தொடங்கினர் என அதிரடிப் படைப் பிரதி இன்ஸ்பெக்டர்



ஜெனரல் கூறியதாக ஒரு செய்தி நிறுவனம் தெரிவித்தது. அதன் பின் புலிகள் தாக்கக்கூடும் என அஞ்சித் தற்பாதுகாப்புக்காக உண்மையான குண்டுகளினால் தாக்குதலை அதிரடிப்படையினர் ஆரம்பித்தனராம். இந்த விளக்கத்திலுள்ள பகிடியென்னவென்றால், விசேட அதிரடிப்படைப் பொலிஸ் ஒருவர் கூட கொல்லப்படுவதை விட்டுவிட்டாலும் சிறுகாயம் கூட அடையவில்லை என்பதுதான்.

சில செய்தி வட்டாரங்கள், பெயர் குறிப்பிடப்படாத பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி- புலிகள் விசேட அதிரடிப்படை முகாமைத் தாக்கியதாகவும், இரு பக்கத் தாக்குதல்களுக்கிடையில் அகப்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் ஆரம்ப அறிக்கைகளை ஒலிபரப்பின. இது முற்றுமுழுதாகத் தவறானதாகும். அத்தகைய தாக்குதலுக்கு உறுதியான ஆதாரம் எதுவுமேயில்லை. மக்களுக்கு மத்தியிலிருந்து புலிகள் சுடத் தொடங்கியபடியால்தான் அதிரடிப் படையினர் சுட ஆரம்பித்தனர் என்பது மெல்ல மெல்ல ஆவலைத் தூண்டும் மற்றொரு கருத்தாகும். அத்துடன் கைக்குண்டும் வீசப்பட்டதாம். ஆனால் கைக்குண்டு வீசப்பட்டதற்கும் எந்த வித சான்றுமேயில்லை.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் காக்கி உடை அணிந்திருந்தார். இவர்தான் புலியெனச் சுட்டிக்காட்டப்பட்டார். ஏனெனில்- இவருடைய உடை புலிகளின் உடையை ஓரளவு ஒத்ததாகவிருந்தது. ஆனால் இவர் ஒரு சாதாரண பொது மகனாவார்.

காஞ்சிரங்குடா முகாமிற்கு வெளியே ஒரு தாக்குதல் றைபிள் கண்டெடுக்கப்பட்டதாக மற்றொரு அறிக்கை கூறியது. இது புலிகளுக்குச் சொந்தமானதென்பது அவர்களது அனுமானமாகும். இந்த றைபிள் அதிரடிப்படையினராலேயே போடப்படதென்பது தமிழ்ச் செய்தி ஊடகங்களின் கூற்றாகும்.

ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்ட பொதுமக்கள் புலிகள் தாக்கினர் என்பதை திட்ட வட்டமாக மறுத்ததுடன், ஆர்ப்பாட்டங்களில் சிரேஷ்ட புலித்தலைவர்கள் எந்தவித நேரடி ஈடுபாடும் கொண்டனர் என்பதையும் மறுத்தனர். அதிரடிப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியபின்புதான் அவர்களுடைய முகாம்களுக்கு சேதம் ஏற்பட்டதென்றும் அத்துடன் அவர்களே அந்தச் சேதங்களை ஏற்படுத்திக் கொண்டனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கும் வேளையில், அண்மையிலுள்ள தாண்டியடி அதிரடிப்படை முகாமிலிருந்து 25 அதிரடிப்படையினரை ஏற்றிக் கொண்டு ட்ரக்வண்டி அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. இதில் வந்தவர்கள்தான் அதிரடிப் படை முகாமிற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இது நடந்த பொழுது காஞ்சிரங்குடா முகாமினுள் இருந்தவர்களும் சுடத் தொடங்கினர். முகாம் சுற்றாடலின் உள்ளேயும் வெளியேயுமிருந்து பொது மக்கள் தாக்கப்பட்டனர்.

இந்தச் செய்தி உண்மையானதென நிரூபிக்கப்பட்டால் நல்லதொரு விளக்கத்தைத் தருகின்றது. தாண்டியடி முகாமிலிருந்து வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்திருப்பார்களானால், காஞ்சிரங்குடா முகாமினுள் இருந்தவர்கள், புலிகள் சுடுகலன்களைப் பயன்படுத்துகின்றார்கள் என எண்ணிச் சுடத் தொடங்கியிருப்பர் என்பது அவர்களுக்கு நியாயமானதாகவிருக்கும். இது முகாமிற்கு வெளியே இரு சடலங்களும், முகாம் சுற்றாடலினுள்ளே நான்கு சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டதை விளக்கக்கூடும். மக்கள் உள்ளேயும் வெளியேயும் காயப்பட்டதையும் இது விளக்கும். தாண்டியடி முகாம் அதிரடிப்படையினர் இங்கு வந்ததையும் கண்மூடித்தனமாகச் சுட்டதையும் தான் இது விளக்கவில்லை. தாண்டியடி முகாம் அதிரடிப்படையினர் முதலில் சுட்டிருப்பார்களானால் காஞ்சிரங்குடாவிலிருந்து அதரடிப்படையினரை விட அவர்கள் அதிகம் குற்றவாளிகளாவர்.

சுடத்தொடங்கியதும் குழப்பமும் பீதியும் அவ்விடத்தில் நிலவியிருக்கும். மக்கள் பீதியினால் சிதறி ஓடினர். காயமடைந்த சில மக்கள் அருகில் இருந்த ஆற்றில் விழுந்து மூழ்கிக் காணாமற்போய் விட்டனர் என்பது உறுதிப்படுத்தப்படாத



காஞ்சிரங்குடா முகாமின் முன்புறம்

செய்தியாகும்.

போர் நிறுத்தம் ஏழு மாதங்களுக்கு மேலாக நீடித்திருந்த போதிலும் அரசாங்கம் மற்றும் புலித்தலைவர்களுக்கிடையே அதிகரித்து வரும் நம்பிக்கையின் அளவு- அரச மற்றும் புலிப்படையின் கீழ் மட்ட ஆளணியினரிடையே இன்னும் அதிக அளவில் செறிந்து ஊடுருவிப் பரவவேண்டும் . சந்தேகம் இரு பகுதியினிடையேயும் நிலவுகின்றது. அண்மைக்கால பொதுசன ஆர்ப்பாட்டங்கள் கெட்ட எண்ணம் கொண்டவையென பாதுகாப்புப்படையின் ஆளணியினரால் நோக்கப்படுகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களை மறைப்பாகப் பயன்படுத்திப் புலிகள் பாதுகாப்புப்படை முகாங்களினுள் ஊடுருவி அவற்றை வெற்றி கொள்ளக்கூடுமென அவர்கள் சந்தேகிக்கப்படுகினறனர். சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான புலிப்படையினரின் தந்திரோபாயங்கள் பற்றிய உண்மை நிலவரங்களை சரியான முறையில் புரிந்து கொள்ளாமையையும் இது முற்றிலும் சாத்திய மற்றதென்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. இருந்த போதிலும் இந்த அச்சம்- வவுனியாவிற்குத் தெற்கேயுள்ள பொறுப்புணர்ச்சியற்ற இனவாத அரசியல்வாதிகளால் நெய் யூற்றியும் வளர்க்கப்படுகின்றது.

கிழக்கிலுள்ள ஆயுதப்படை குறிப்பாக விசேட அதிரடிப்படையினர் குற்றச்சாட்டுக்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். அண்மைக்காலப் பொதுசன ஆர்ப்பாட்டங்களில் புலிகளின் கரங்களின் செயற்பாட்டு முறைகள் இருப்பதாக ஆயுதப்படையினரால் நோக்கப்படும் வேளையில்- இராணுவ நிறுவனங்களில் குறிப்பாக அதிரடிப்படையினர் நீண்ட காலமாக வேதனைகளைத் தமிழ் மக்களுக்கு தந்து வருகின்றனர் .

அதிரடிப்படை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் உருவாக்கப்பட்டதாகும். இதை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாகவிருந்தவர் அவருடைய மகன் ரவி. வெளிப்படுத்தப்படாத சில காரணங்களுக்காக அவருடைய மைத்துனர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ரவி தற்போது பாதுகாப்பு ஆலோசகராக விளங்குகிறார்.

தமிழ்மக்களிடத்ததில் அச்சத்தை நிலைநாட்டுவதற்காக அதிரடிப் படையினர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். . கிழக்கு மாகாணத்தில் இது திறம்படச் செயற்பட்டுள்ளது . 1995இல் கொழும்பிலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் தமிழ்இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதும், இது தொடர்பாக அதிரடிப்படையினர் தடுத்து வைக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து அவர்கள் மீது வழக்குத் தொடுக்க சட்டமா அதிபர் திணைக்களம் விருப்பமின்றியிருப்பதும் வெளிப்படையான உதாரணமாகும்.

காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் குறிப்பாக இந்த விடயத்தில் அபகீர்த்தியுடையதாகும். தங்கவேலாயுதபுரம், மற்றும் இன்ஸ்பெக்ரர் ஏற்றம் ஆகிய இடங்களில் தமிழ் பொதுமக்கள் மீதான சித்திரவதைகள் அங்கு அப்பொழுதிருந்த ஆளணியினர் மீதான பெரும் குற்றஞ்சாட்டாகும். பொதுவாக தமிழ் மக்களுக்கு எதிராகவும் குறிப்பாக புலிகளுக்கு எதிராகவும் ஆழமான வெறுப்புணர்வை தங்கள் மனங்களில் நிலைநிறுத்தி வைத்திருப்பவர்களென அதிரடிப்படையில் ஒரு பகுதியினர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இந்த வகையில்- குறிப்பிடத்தக்க அளவு ஆயுதப் படைப்பிரிவினர், சமாதானச் செயற்பாடுகளையிட்டு மகிழ்ச்சியடைபவர்களல்லர். அத்துடன் போர் நிறுத்தத்திற்கெதிரான சதி முயற்சிகளிலும்அவர்கள் ஈடுபாடு காட்டுவது பகிரங்க இரகசியமாகும்.

போர் நிறுத்தக் காலத்தில் அதைக குழப்புவதற்கேற்ற சம்பவங்களில் இடைக்கிடையே காஞ்சிரங்குடா அதிரடிப்படையினரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஒரு பாடசாலை ஆசிரியரின் மனைவி தாக்கப்பட்டார். இந்த முகாமிலுள்ள அதிரடிப்படை

ஆங்கிலத்தில்:டி.பி.எஸ் ஜெயராஜ்
தமிழாக்கம்: எழில்

யினர் சிலர் பொதுமக்களிடமிருந்து பணம் பறித்து தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர் என்றும், போர் நிறுத்தத்தின் பின் இது பெருமளவில் குறைந்து விட்டதென்றும் இதனால் இவர்கள் போர் நிறுத்தத்திற்கு எதிராகச் செயற்ப செயற்படுகின்றனர் என்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த காலங்களிலும் அதிரடிப் படையினர் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டுப்பாடற்ற பலப்பிரயோகத்தில் ஈடுபட்டு வந்தது உண்மையாகும். புலிப்படைத் தலைவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அந்த வகையில் மித மிஞ்சியதாகும். அதற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

பொதுமக்கள் மீதான துப்பாக்கிச்சூடும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கடந்தகால வரலாறுகளை நோக்கும்போது அதிரடிப்படையினருக்கெதிராக உத்தியோகபூர்வமாக எத்தகைய குற்றங்களும் நிரூபிக்கப்படுவது மிக மிக அரிதாகும்.

இத்தகைய சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறாழல் தடுப்பதற்கேற்ற வழிமுறைகளைக் கண்டறிவதோடு, பாதிக்கப்பட்டவர்களுகக்கும், அவர்களுடைய வாரிசுகளுக்கும் போதியளவு இழப்பீடுகளை உறுதிப்படுத்துவதும் மிக அவசியமாகும்.

நன்றி - சண்டே லீடர்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விரைவில் வடபகுதி ரயில் சேவை
# அவுஸ்ரேலியா அரசாங்கம் உதவும்!

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில் சேவையை புனரமைப்பதற்காக அவுஸ்திரேலியாவின் உதவியை பெற அரசு திட்டமிட்டுள்ளது. இதனடிப்படையில் அவுஸ்திரேலிய ரயில்வே நிபுணர்கள் குழு ஒன்று புனரமைப்பு தொடர்பான தமது அறிக்கையை தயாரித்துள்ளது.

கடந்த திங்களன்று இக்குழுவினரின் அறிக்கை போக்குவரத்து அமைச்சகத்திடம் கையளிக்கப்பட்டது. ரயில் பாதை மட்டுமல்ல பாலங் கள், ரயில் நிலையங்கள், ரயில்வே பங்களாக்கள், தங்குமிட விடுதிகள் என்பனவும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வன்முறைகளை கட்டுபடுத்த அரசும் புலிகளும் ஆதரவு
### கண்காணிப்புக் குழு தலைவர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில அண்மையில ஏற்பட்ட அசம்பாவிதங்கள், வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தரப்பும்,தமிழீழ விடுதலைப்புலிகளும் தமக்குப் பூரண ஆதரவை வழங்கியதாக கொழும்பிலுள்ள சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுகுறித்துத் தெரிவிக்கையில், காஞ்சிரங்குடாவில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னர் ஹர்த்தால் நடத்தப்பட்டாலும் வன்முறைகள் எதுவும் நிகழவில்லை. இது திருப்தி தரும் ஒரு விடயமாகும்.

மூவின மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் கூட்டங்களை நடத்துவதற்கான ஒழுங்குகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு செய்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கஸ்தூரியார் வீதியில் கைதான இளைஞர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் நேற்று சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

செல்லத்துரை குகராசா வயது(24) என்ற இளைஞன் 2001 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதி கஸ்தூரியார் வீதியில் இடம் பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் இராணுவத்தினரால் சுடப்பட்டு கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சிறைச் சலையில் தடுத்து வைக்கப்பட்ட இவர்- யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜாவின் உத்தரவின் பேரில் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா அனுமதித்துள்ளார். (லி)

## சைக்கிள் திருடியவருக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியைத திருடியமைக்காக வேலணை வாசி ஒருவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா குற்றப் பணமும் யாழ்.நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

வேலணை தெற்கைச் சேர்ந்த ஒருவர்- தான் துவிச்சக்கரவண்டி திருடியமையை ஒப்புக்கொண்டதன் நிமித்தம், யாழ்.மேலதிக நீதவான் சரோஜினிதேவி இளங்கோவன் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட சிறையும் 1000ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.(லி)

## யாழ்.பல்கலை.சட்டபீடத்தில் முதற்கட்டமாக 50 மாணவர்
### 2003 இல் உ/த பரீட்சையில் தோற்றுவோருக்கு சந்தர்ப்பம்

யாழ். பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பீடத்தை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது. இதனடிப்படையில் 2003 க.பொ.த உயர்தரப்பரீட்சையில் தோற்றுவோர்க்கு யாழ் . பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் இணைந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

முதற்கட்டமாக 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இச்சட்டபீடத்தில் சிவில் சட்டம், குற்றவியல் சட்டம், அரசியலமைப்பு சட்டம் ஆகிய மூன்று துறைகள் ஆரம்பத்தில் அமையும்.

சட்டபீடத்திற்கான நூலகவசதி, வகுப்பு, ஆளணி ஒழுங்குகள் என்பவற்றை துரிதகதியில் ஏற்பாடு செய்வதாக துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். சட்டபீடத்திற்கான அங்கீகாரம் மானிய ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் மென்டிசினால் தமக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதாகவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்

## கண்காணிப்பு குழு அறிக்கை
## அரசு - புலி பிரதிநிதிகள் அதிருப்தி

(லண்டன்)

அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதியும், அரசாங்கப் பிரதிநிதியும்- காஞ்சிரங்குடா அதிரடிப் படையின் முகாமுக்கு அருகில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக, இலங்கை போர்நிறுத்தக கண்காணிப்புக் குழுவின் தலைவர் புரூவ் ஹொவ்டே வெளியிட்ட நில வர அறிக்கை தொடர்பாக- கருத் தொருமைப்பாட்டுடன் தமது அதி ருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

அதிரடிப்படையினரின் செயற்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் புரூவ் ஹொவ்டேயின் அறிக்கை அமைந்திருப்பதாக புலிகளின் பிரதிநிதி செளந்தரராஜன் வாதாடிய வேளையில், அவ்விடயத்தை அரசாங்கப் பிரதிநிதியும் ஏற்றுக்கொண்டார்.

அறிக்கை உண்மையை வெளிக் கொண்டு வரக்கூடிய வகையில் வெளியிடப்பட வேண்டும் என்று இருவரும் தெரிவித்தனர். இவ் விடயம் தொடர்பில் தாங்கள பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந் தித்து நிலைமைகளை அவர்கள் மூலமாக சரிவரப் பெற்றுக்கொள்ள வில்லை என்பதை குழுவின் சர்வ தேசப் பிரதிநிதியும் ஏற்றுக்கொண்டார்.

### தமிழ் மக்களின்...

மான மனநிலையிலும் இருப்பதை தாம் உணர்ந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஈழத்தமிழ் மக்களின் உண்மையான மன உணர்வுகளை தாம் டெல்லி சென்று இந்தியப்பிரதமர் வாஜ்பாய்க்கும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் ஆகியோருக்கும் எடுத்துச் சொல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து புலமை சார்ந்த மனித உரிமை ஆர்வலர் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. இக்குழுவில் மேற்படி துறையில் புலமைசார்ந்தவர்களான கண்ணபிரான்,திருமதி. மோகினி கிரி, சச்சார் மற்றும் மதுரைப் பேராயர் தேவசகாயம், திருமதி. சரஸ்வதி, பேராசிரியர் ஐ. தேவசகாயம், ஹென்றி டி.்.பென் ஆகியோர் வந்துள்ளனர். இக் குழுவினர் இலங்கையின் அநேக பகுதிக்ளுக்கும் பிரிந்து சென்று நிலைமைகளை அவதானித்து வருகின்றனர். இவ் விஜயத்தின் இறுதியில் கூட்டாக இலங்கையின் நிலைவரம் குறித்து அறிக்கை ஒன்றை இவர்கள் தயாரிப்பார்கள் என்றும் தெரியவருகிறது.

### பிரிட்டிஷ்....

யல்துறை நடுவப் பணியகத்தில், சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இப்பேச்சுக்கள் சுமார் ஒன்றரை மணிநேரம் இடம் பெற்றன. பேச்சுக்களின் போது, இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் வட-கிழக்குப் பகுதிகளை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது பற்றிய மதிப்பீடுகளை செய்வதில் எம்.பிக்கள் இருவரும் அதிக ஆர்வம் காட்டினர்.

## மீசாலையில் மினிபஸ் மோதி இரு பொதுமக்கள் காயம்

(சாவகச்சேரி)

மீசாலை புதிய ரயில் நிலையத்தடியில்-கண்டி வீதியில்,நேற்றிரவு ஒரு மணியளவில் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் இரண்டு பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ் ஒன்று சைக்கிளில் சென்று கொண்டிருந்த க.சிவசுப்பிரமணியம் (வயது48), ந.நவமணி (வயது36) ஆகியோர் மீது மோதியது.

இதனால் படுகாயமுற்ற இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். விபத்துக்குள்ளான மினிபஸ்ஸை அதன் நடத்துனரே செலுத்தி வந்ததாகவும் அவர் சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

விபத்து இடம் பெற்றதையடுத்து ஆத்திரமுற்ற பொதுமக்கள் மினிபஸ்ஸை சேதமாக்க முற்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தலையிட்டு பொதுமக்களைச் சமாதானம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (29)

### சில்லறை...

தொகையாக அமைகின்றதால் அவற்றை வழங்க முடியாமற் போவதுடன், அது சர்ச்சைகளையும் உருவாக்கிவிடுவதாக காசாளர் ஒருவர் தெரிவித்தார். இதன் காரணமாக தமக்கு கள்ளப்பெயரும் கிடைத்து விடுவதாக அவர் சொன்னார்.

மேலும் வர்த்தக நிலையங்களில் பொருட்கொள்வனவு செய்யும் போது கூட வர்த்தகர்கள் பெரும்பாலும் சில்லறை நாணயங்களைப் பரிமாறுவதில் இடையூறுகளை அனுபவிக்கின்றனர்.

அதற்காக இனிப்பு மிட்டாய்கள், தீப்பெட்டிகள் என்பவற்றைக் கொடுத்து சமாளிக்கவும் கடைக்காரர்கள் முற்படுகின்றனர்.

போதிய சில்லறைகளைப் புழக்கத்தில் விடுவதில் வங்கிகள் பங்களிக்க வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

### எரிபொருட்களின்...

பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம அறிவித்துள்ளது. உலகச் சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதாலேயே இவ்வதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் எரிபொருட்களின் விலை உயர்த்தப்படுவது இது ஐந்தாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரபாகரனுடன்....

சொல்ஹெய்ம், ஸ்ரீலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் ஆகியோருடன் இந்த முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளனர்.

தாய்லாந்துப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட புனர்வாழ்வு-புனரமைப்புக்கான செயலணிக்குழுவை அமைத்தல் சம்பந்தமாகவும்,உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது பற்றியும், பொதுமக்களின் மீள்குடியேற்றம் பற்றியும் இச்சந்திப்பில் பேசப்படலாம எனத் தெரியவருகின்றது.

இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் தாய்லாந்து- இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கான முற்தயாரிப்புக்கள் பற்றியும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்படலாம் என மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### தலைவர்...

இச்சந்திப்பின்போது-தாய்லாந்துப் பேச்சுக்களின்போது-விடுதலைப்புலிகள் தரப்பின் செயலாளராகக் கலந்துகொண்ட திருமதி. அடேல் பாலசிங்கமும் உடனிருந்தார்.

### பாலசிங்கம்.....

புலிகளின் கடற் புலிகள் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் வரவேற்றனர்.

முன்னதாக லண்டனிலிருந்து நேற்று முன்தினம் மாலை, யு.எல்-512 இலக்கமுடைய 'ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்' விமானத்தில் புறப்பட்ட கலாநிதி.அன்ரன் பாலசிங்கமும், திருமதி. அடேல் பாலசிங்கமும் நேற்றுக்காலை 9.12 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் அவர்களை வரவேற்றார்.

பாலசிங்கம் வந்த விமானம் விமான நிலையத்தில் இறங்கியவுடன விமானத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த, விமானப்படையின் 'பெல்'ரகத்தைச் சேர்ந்த சி.எச்-522 இலக்கமுடைய ஹெலிகொப்ரரில் அவரும் துணைவியாரும் உடனடியாக ஏறிக்கொண்டனர்.

அதற்கு முன்னதாக, கொழும்பு வரும் வெளிநாடுகளின் மிக முக்கிய பிரமுகர்களுக்கான குடிவரவு நடைமுறைகளின்படி அதற்கேற்ற விசேட கவனிப்பே அன்ரன் பாலசிங்கத்திற்கும், திருமதி அடேல் பாலசிங்கத்திற்கும் வழங்கப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முதல் இராணுவ விசேட பிரிவினரின் கடுமையான பாதுகாப்பு வளையத்திற்குள்ளாக்கப்பட்ட கட்டுநாயக்கா விமானத்தளத்தில் நேற்றுக்காலை பாலசிங்கம் வருவதாக பெருந்தொகையான செய்தியாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் கூடியிருந்தும் பாலசிங்கத்தின் வருகையை புகைப்படமெடுக்க எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டுநாயக்காவிலிருந்து கிளம்பிய சி.எச்-522 ஹெலிகொப்ரர், பாலசிங்கம் தம்பதியினரை ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து வன்னி நோக்கிப் புறப்பட்டது.

வன்னி வான்பரப்பில் நுழைந்த ஹெலிகொப்ரர் புதுக்குடியிருப்பிலுள்ள மாலதி விளையாட்டரங்கில் 10.15 மணிக்குத் தரையிறங்கியது. அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் அவரை வரவேற்றனர். அங்கு பெருமளவு பொதுமக்களும், மாணவர்களும் கூடிநின்றனர்.மாலதி விளையாட்டரங்கிலிருந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் தமிழீழ காவல்துறையினின் பாதுகாப்புடன் அன்ரன் பாலசிங்கத்தையும், திருமதி. அடேல் பாலசிங்கத்தையும் அழைத்துச் சென்றனர்.

### இத்தாலி...

ஏற்பாடாகியுள்ளது.இவ்விரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயவுள்ளார்கள்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.99 | 96.41 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.15 | 150.47 |
| 1 யூரோ | 94.53 | 95.61 |
| 1 சுவிஸ் பிராங் | 64.51 | 65.49 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 51.99 | 52.93 |
| 1 ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1 சவூதி றியால் | 25.66 | 25.66 |

## கண்ணீர் அஞ்சலி



கேணியடி,
கொக்குவில் மேற்கு.

எமது சனசமூக நிலையத்தின் போஷகர்
திரு.ரீ.இரட்ணேஸ்வரன்(கிராமசேவையாளர்J/127)
அவர்களின் செல்வப் புதல்வன்
**இரட்ணேஸ்வரன் ஹம்ஸ்ஜீவனின்** .மறைவால்
துயருற்றிருக்கும் அன்பரின் உறவுகளுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

**கலைமகள் சனசமூக நிலையமும்**
**பாலர் பாடசாலையும்** (சி-061)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.